C. Malan

திருட்டாந்த சங்கிரகம், 1854.

OR

A COLLECTION OF PROVERBS

IN

TAMIL,

WITH

THEIR TRANSLATION

IN

ENGLISH.

BY

P. PERCIVAL.

PUBLISHED BY THE JAFFNA BOOK SOCIETY.

American Mission Press,—Jaffna.
1843.

ADVERTISEMENT.

It is hoped that the following collection of Tamil Proverbs may be useful to those who are in any way connected with the interesting people who speak that language. Examples of concise and forcible expression are hereby furnished, which may tend to aid in the study of the language, and occasional allusions to national, social, and religious usages may suggest heads of valuable enquiry, whilst the modes of thinking,–the natural shrewdness and other features of the Hindu mind will be seen through this medium. It is presumed that the translation generally conveys the sense of the original, although not always with that force, nor with the elegance which might be desired. Should it be called for, a future edition may remedy some of the existing faults, and also supply the deficiencies, both as to the character of the translation and the number of the examples.

JAFFNA, *Christmas*, 1842.

திருட்டாந்தசங்கிரகம்,

OR

A COLLECTION OF PROVERBS.

---

1. அளவிற்குமிஞ்சினாலமுதமுநஞ்சு.

   If taken to excess even nectar is poison.

---

2. அணிலேறவிட்ட நாய் பார்ப்பதுபோல.

   As the dog looks up at the squirrel that has escaped him.

---

3. அடாதுசெய்தவர் படாதுபடுவர்.

   They who do what is wrong, will suffer what they might have avoided.

---

4. அல்லக்காட்டுநரி பல்லைக்காட்டுவதுபோல.

   Showing the teeth as the jackal from the ginger wilds.

---

5. அரசனன்றறுக்குந் தெய்வநின்றறுக்கும்.

   The king administers instant punishment, but God delays his judgment.

---

6. அப்பமென்றாற் பிட்டுக்காட்டவேண்டுமா?

If really bread, is it necessary to break it in order to prove it such? Or, shall we break the loaf to show that it is bread?

---

7. அப்பாவென்றாலுச்சிகுளிருமா?

Will the exclamation my father!—cool the crown of the head? or, Will words of commiseration cool the head?

---

8. அரிசியுண்டானால் வரிசையுண்டாம்.

Where there is rice there is honour.

---

9. அன்னநடைநடக்கப் போய்க் காகந் தன்னடையுங் கெட்டதுபோல.

The crow imitating the gait of the swan lost even his own.

---

10. அற்பருக்குப் பவுஷுவந்தால் அத்தராத்திரியிற் குடைப்பிடிக்க வேண்டும்.

When persons of low rank are elevated, the umbrella must be borne even at midnight.

---

11. அரைக்காசுக்கழிந்தகற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலுங் கிடையாது.

Chastity forfeited for half a cash cannot be retrieved by thousands of gold.

---

12. அட்டையையெடுத்து மெத்தையில் வைத்தாலுஞ் சேற்றையைச் சேற்றையைநாடும்.

Though the woodlouse be placed on a cushion it will again seek the dunghill.

---

13. அழுதும்பிள்ளை அவளேபெறவேண்டும்.

Though she weep with the pain of parturition she herself must bring forth.

---

14. அரைச்சல்லியை வைத்தெருக்கலையைக் கடந்ததுபோல.

As one jumped over the shrub under which he had buried half a farthing.

---

15. அறியாமற்றாடியை வளர்த்தம்பட்டன்கையிற் கொடுக்கவோ!

In ignorance that it would fall into the hands of the barber, have I allowed my beard to grow?

---

16. அத்தத்தின் மிடுக்கல்லோ அம்பட்டன்பெண் கேட்டது.

Is it not from the abundance of his wealth that the barber solicits in marriage the daughter of a nobleman?

---

17. அறுக்கமாட்டாதவன்தணடியிலைம்பத்தெட்டரிவாள்.

Fifty eight sickles by the side of one who cannot reap.

---

18. அறப்படித்தவராங்காடி போனால் விற்கவுமாட்டார் கொள்ளவுமாட்டார்.

When the over-scrupulous go to market, they neither buy nor sell.

---

19. அழுவாரழுவாரெல்லாந் தங்கரைச்சல் திருவன்பெண்டிலுக்கழுவாரில்லை.

None weeps for Tiruvan's wife, but all on account of their individual sorrows.

---

20. அணிலின் பிள்ளைக்கு நுங்கரிதோ ஆண்டிச்சிபிள்ளைக்குச் சோறரிதோ!

Is there scarcity of the pulp of the young palmyra fruit to the young squirrel, or of rice to the child of the mendicant woman.

---

21. அடிநாக்கிலேநஞ்சும் நுனிநாக்கிலேயமுதும்.

Ambrosia at the tip of the tongue, but poison at the root.

---

22. அயிரையுஞ் சற்றேயருக்குமாம் பிட்டுக்குட்போட்டுப்பிசறமல்.

The sprat not having been mixed with the rice cake in due time, now refuses.

---

23. அகப்பைபிடிக்கிறவன் தன்னுளானால் அடிப்பந்தியென்ன தலைப்பந்தியென்ன!

If the waiter be one's own servant, what matters it whether one sit first or last at the feast?

---

24 அகதிபெறுவதும்பெண்பிள்ளையதுவும்வெள்ளிப்பூ
ராடம்.

A female child is born to the destitute on the friday, and under the star Puradum.

---

25. அறப்படித்தவர்கூழ்ப்பானையில்விழந்தார்.

The scrupulous has fallen into the pan of gruel: or, The erudite has fallen into the pan of broth.

---

26. அவதந்தரந் தனக்கந்தரம்.

His evil stratagem ended in his own ruin.

---

27. அத்திக்காயைப் பிட்டுப்பார்த்தாலங்கும் பொள்ள
லிங்கும்பொள்ளல்.

The broken fig is every where porous.

---

28. அஞ்சினவன் கண்ணுக்காகாயமெல்லாம் பேய்.

To the timorous the atmosphere is filled with demons.

---

29. அகப்பட்டுக் கொள்வேனென்றோகள்ளன்களவெ
டுக்கிறது!

Does the thief, when going to plunder, expect to be caught?

---

30. அரிசி கொடுத்தக்காள்வீட்டிலுண்ணவேண்
டுமோ?

When one furnishes his own rice is it needful that he eat it in the house of his eldest sister?

---

31. அழுக்குச்சீலைக்குள்ளே மாணிக்கம்.
A cornelian in a dirty cloth.

---

32. அரசனைநம்பிப்புருஷனையிழந்தேன்.
By confiding in the king I lost my husband.

---

33. அப்பச்சிகதம்பையைச் சூப்பப்பிள்ளைமுற்றினதே ங்காய்க்கழுகிறது.
While the father sucks the rind of the cocoa-nut, the child is crying for the pulp.

---

34. அரிசியள்ளின காகம்போல.
Like a crow that has taken away rice.

---

35. அல்லாதவன்வாயிலேகள்ளைவார்.
Pour toddy into the mouth of the worthless.

---

36. அம்மா கள்ளீரே, ஆடையைத்தின்றல் வெண்ணை யுண்டோ!
You worthless woman, is butter to be taken after the cream is eaten?

---

37. அறுப்புக்காலத்தில் எலிக்கு நாலுபெண்சாதி.
During harvest the rat has four wives.

---

38. அண்ணன்கோம்பும்பம்பளவிழாச்சு.
Even my brother's horn is still imaginary.

---

39. அறக்கூர்மை மழுமொட்டை.

Excessive sharpness is as bluntness.

---

40. அண்டத்தைக் கையிலே வைத்தாட்டுவானுக்குச் சுண்டைக் காய்மெத்தப் பாரமா?

Is the chunde fruit burdensome to him who sustains the globe in his hand?

---

41. அண்டத்திலில்லாதது பிண்டத்திலேயோ?

Is that in the body which does not exist in the universe?

---

42. அரிசியுழக்கானாலும் அடுப்புமூன்று.

Though only an eighth of a measure of rice, yet three cooking hearths.

---

43. அப்பஞ்சுட்டது திட்டையிலே அவலிடித்ததுசட்டியிலே.

The bread is baked in the mortar, and the rice is beaten in the chatty.

---

44. ஐயருள்ள காலமறுதகோண்டு சூறையாடினது இப்போகண்டருளக்கண்டருள.

During the life time of Ayar they purloined with ease, but now behold.

---

45. அம்மையார் நூற்கிறநூல் கிழவனுடைய அரைஞாணுக்குக்காணாது.

The yarn spun by the old woman is not sufficient for the waist string of the old man.

---

46. அச்சையிலே போனாலும் அகப்பையரைக்காசு.

Though a wooden spoon were conveyed to Acheen, its price is only half a farthing.

---

47. அல்லைக்கிழங்கிலடிமுறிதின்றவன்கல்லையுங்கல்லுவான்.

He who has eaten the point of the root of the alley will even dig up stones to obtain it.

---

48. அப்பச்சி கோவணத்தைப் பருந்துகொண்டுபோகிறது பிள்ளைவீரவாளிப்பட்டுக்கழுகிறது.

The kite has carried away the last rag of the father, and yet the child cries to be dressed in silk.

---

49. அணையைக்கடந்தவெள்ளம அழுதாலும்வருமா?

Will the flood that has burst the dam return if one cry after it?

---

50. அடிநொச்சி நுனியாமணக்கா?

Is the root noche and the top the castor plant?

---

51. அவனுனக்குக் கத்திதீட்டுகிறான்.

He whets a knife for you.

---

52. அவனுடையசிறகு முறிந்துபோயிற்று.

His wings are broken.

---

53. அறச்சேட்டு முழு நட்டம்.

Exorbitant charges produce great loss.

---

54. அறுதலிமகனுக்கங்கமெல்லாஞ்சேட்டை.

The son of a widow is mischievous in all his members.

---

55. அன்னமயமன்றிப் பின்னைமயமில்லை.

There is no physical virtue except in food.

---

56. அகதியைப்பிடித்துப் பகுதிகேட்கிறது.

Seizing the destitute and demanding tribute.

---

57. அவனெனக்கட்டமத்துச்சனி.

He is to me Saturn in the eighth sign.

---

58. அஸ்திமசகாந்தரமென்கிறதுபோலேயிருக்கிறது.

It is as if one said the difference is as great as between the elephant and mosquito: or, It is like stating the difference between an elephant and mosquito.

---

59. அஞ்சும் மூன்றுமுண்டானாலறியாப் பெண்ணுங் கறி சமைப்பாள்.

An ignorant girl may make curry out of five and three ingredients.

---

60. அல்லற்பட்டாற்றதழுதகண்ணீர் செல்வத்தைக்கெடுக்கும்.

The tears of unalleviated suffering are destructive of the oppressor.

61. அறணையலகு திறவாது.

The lizard opens not his mouth.

62. அல்லவைதேயவறம்பெருகும்.

As depravity wears away, virtue increases.

63. அவப்பொழுதிற்றவப்பொழுது.

Penance is preferable to indolence.

64. அவன்காலால்முடிந்ததைக்கையாலவிழ்க்கக்கூடாது.

What he tied with his feet another cannot loose with his hands.

65. அவன்காலாற்கீறினதை நாவாலழிக்கிறேன்.

His foot-marks I efface with my tongue.

66. அவன்சிறகில்லாப்பறவை.

He is a bird without wings.

67. அடிக்குமோர்கையணைக்குமோர்கை.

One hand smites and the other embraces.

68. அடைப்பைப்பிடுங்கினவனைப்பாம்புகடிக்கும்.

A serpent will bite him who destroys another's fence.

---

69. அவாந்தரத்திலேஅக்கினிபற்றுகிறது.

To kindle a fire in mid-air.

---

70. அன்றுகண்டமேனிக்கழிவில்லை.

His body has suffered no decay since he was seen the other day.

---

71. அவன்மிதித்தவிடத்திற்புல்லுஞ்சாவாது.

Even the grass will not die beneath his footsteps.

---

72. அவன் மிதித்தவிடம்பற்றியெரிந்துபோம்.

The ground he treads upon will ignite and be consumed.

---

73. அடியாதநாடு படியாது.

Subordination in a state is the result of discipline.

---

74. அஞ்சுகாசுபெறக் குதிரையும்வேணும் ஆற்றைக்கடக்கப்பாயவும்வேணும்.

A horse is wanted for five cash, and he must be able to leap over the river.

---

75. அகதிதலையிலேபொழுதுவிடிகிறது.

The sun rises on the head of the indigent.

---

76. அவலைநினைத்துரலைஇடிக்கிறது.

To beat the empty mortar thinking of the flattened rice.

---

77. அழுதகண்ணுஞ் சிந்தியமூக்கும்.

A tearful eye and a running nose.

---

78. அன்னமிட்டவீட்டிற் கன்னமிடலாமோ!

Is it right to break into the house whence our food was obtained?

---

79. அகலநின்றாற் பகைஞருமுறவு.

If distant, even enemies are as friends.

---

80. அருகாகப்பழுத்தாலும் விளாமரத்தில் வெளவால் வராது.

However near the tree of ripe stone-apples may be, the flying fox will not alight on it.

---

81. அன்னம் முட்டானலெல்லாம் முட்டு.

Where food is scarce all is scarce.

---

82. அற்பசிக்குங் கார்த்திகைக்கும் மழையில்லாவிட்டால் அண்ணனுக்குஞ்சரி தம்பிக்குஞ்சரி.

If no rain falls in October and November the elder and younger brother are on an equality.

---

83. அப்பனருமை அப்பன் மாண்டாற்றெரியும். உப்பிலருமை உப்புச் சமைந்தாற்றெரியும்.

The excellency of the father is estimated after his decease, the value of the salt is discovered after it is expended.

---

84. அரவுக்கில்லைச் சிறுமையும் பெருமையும்.

The mere size of the snake is not a matter of consideration.

---

85. அவிளென்ன செய்யும் அஞ்சு துணைஞ் செய்யும். பொருளென்ன செய்யும் ஊரை வசஞ்செய்யும்.

What will rice effect? It will awake the five senses. What will wealth effect? It will subordinate the surrounding country.

---

86. அடிச் சட்டிக்குள்ளே கரணம்போடலாமா?

Can one make a summerset in the bottom of a chatty?

---

87. அபசாரியாடுகிறது குலத்துக்கீனம்.

Female licentiousness is a disgrace to her family.

---

88. அகதிக்காகாயந் துணை.

To the destitute the air is a help; or, The air is the refuge of the destitute.

---

89. அடியைப் போலே அண்ணன்றம்பியுதவார்.

Neither the elder nor younger brother can effect so much as the rod.

---

90. அவசரக்காரனுக்குப் புத்தி மத்திமம்.

He who is in a hurry is deficient in sense.

---

91. அற்பவாசை கோடி தவத்தைக் கெடுக்கும்.

The least desire vitiates a myriad of penances,

---

92. அரிசிப் பொதியுடனே திருவாரூர்.

To go to Tiruvarore with a sack of rice.

---

93. அடியும்பட்டுப் புளித்த மாங்காயுந் தின்ன வேண்டுமா?

Is it necessary both to be punished and to eat sour mangoes?

---

94. அரிவாட்சூட்டைப்போலக் காச்சல் மாற்றவோ!

Can fever be cured as a hot sickle is cooled?

---

95. அங்கே தப்பியிங்கே தப்பி அகப்பட்டுக்கொண்டான் தும்மட்டிப்பட்டன்.

Tumattipattan escaped here and there but was caught at length.

---

96. அடிமேலடியடித்தால் அம்மியுநகரும்.

Even the grind stones will be affected under repeated strokes,

97. அழுக்கையழுக்குக்கொல்லும் இழுக்கையிழுக்குவெல்லும்.

Impurity destroys impurity, and ignominy overcomes ignominy.

---

98. அடியற்ற மரம் போல.

Like a tree without root.

---

99. அந்தூது நெல்லானேன்.

I am become as paddy eaten by insects.

---

100. அமுதமுண்கிற நாவினாலே விடமுண்பாரோ!

Will he eat poison with the tongue with which he ate ambrosia?

---

101. அரசனில்லாப் படைவெட்டு.

The battle of an army having no chief.

---

102. அடைமழைக்குள்ளோர் ஆட்டுக்குட்டி செத்தது போல.

As a lamb that died during continued rain.

---

103. அப்பு சாவ மகன் கப்புப்பிடிக்கிறது.

The son seizing the pillar as his father dies.

---

104. அங்கத்தைக்கொண்டுபோய் ஆற்றிற் சேர்க்கவொண்ணாது.

It is not fit that we should put our body into the river.

---

105. அடங்காப் பாம்பிற்கிராசா மூங்கிற்றடி.

The bamboo is king to the untamed serpent.

---

106. அறமுறுக்குக் கொடுப்புரிக்கொண்டற்றுவிடும்.

By severe twisting the rope breaks.

---

107. அடிக்கவடிக்கப் பந்து விசைகொள்ளும்.

The ball rebounds in proportion as it is beaten.

---

108. அந்தரத்திற் கோலெறிந்தவந்தகன் போலே.

As the blind who threw away his stick.

---

109. அறுபது நாளைக்கெழுபது கந்தை.

Seventy rags for sixty days.

---

110. அநக்காணி நாய்ச்சியார் குரங்குப் பிள்ளைப் பெற்றவாம்.

It is said that the delicate lady has brought forth a young monkey.

---

111. ஆனையேறித் திட்டிவாயினுழைவாரா!

Will one enter through a small door-way on the back of an elephant?

112. ஆறு நீந்தின எனக்குக் குளநீந்துவதரிதோ!
Is it difficult for me to swim a tank who have swum a river?

---

113. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
Cold gruel is old gruel.

---

114. ஆனைக்கில்லைக் கானலும் மழையும்.
The elephant regards neither sun-shine nor rain.

---

115. ஆல் பழுத்தாலங்கே அரசு பழுத்தாலிங்கே.
When the banian bears, there, and when the figtree bears, here.

---

116. ஆசைப்பட்ட காரியமூசிப்போயிற்று.
The thing once desired is abhorred.

---

117. ஆடிடாவெட்டையிலுநெல்விலையகவில்லை.
Even in the heat of July paddy has no sale.

---

118. ஆடியகாலே பாடிய மிடறே.
The foot accustomed to dancing and the throat accustomed to singing.

---

119. ஆறிய புண்ணிலுமசறு நிற்கும்.
There is a scab on the wound that is healed.

120. ஆசையுமணைடாதால் அழுகையுமணைடாது.

Where there is no desire there is no grief.

---

121. ஆயிரக்கல நெல்லுக்கோரந்துப் பூச்சியாய்த்தோன்றினையே.

You are born as the insect to destroy a thousand bushels of grain.

---

122. ஆயிரம் வயது சென்று செத்தாலும் அந்தச் சாவு.

Though it does not occur before a thousand years are attained, death is regarded as an untimely event.

---

123. ஆகக்குழைப்பேன் அரிசியாயிறக்குவேன்.

I will either overboil the rice or take it off unboiled.

---

124. ஆங்காலமபசாரியாடிச் சாங்காலத் சங்கரா சங்கராவென்கிறது.

To cry sangara sangara after playing the harlot through life.

---

125. அணிக்கிணங்கிய பொன்னும் மாமிக்கிணங்கிய பெண்ணுமருமை.

Gold agreeing with the assayer's test and a woman agreeable to the mother-in-law are scarce.

---

126. ஆசையுள்ளவளவும் அலைச்சலுமுண்டு.

One of excessive desires is ever perturbed.

127. ஆடிற்று கூத்து அமர்ந்ததொரு நாழிகையில்.

Dancing was begun and it ended in an hour.

---

128. ஆயிரம் பனையுள்ளவப்பனுக்குப் பிறந்து பல்லுக் குத்தவீர்க்கில்லை.

He whose father possesses a thousand palmira trees has not a fiber to pick his teeth.

---

129. ஆலையில்லாவூருக்கிருப்பைப் பூ சருக்கரை.

The flower of the olive tree is esteemed sugar where there is no sugar mill.

---

130. ஆள் மெத்தக் கூடினால் மீன் மெத்தப் பிடிக்கலாம்.

The quantity of fish caught will be in proportion to the fishermen.

---

131. ஆளையாளறிய வேணும் மீனைப் புளியங்காயறிய வேணும்.

To know his fellow one must partake his qualities, to know the quality of fish it must be seasoned with tamarind juice.

---

132. ஆளோரு தட்டுக்குத்தட்டவடியென்றலை மிடாப்போலே.

By being buffetted by every one my head has become as large as a caldron.

---

133. ஆக்கப் பொறுக்க நேரமுண்டாறப் பொறுக்க நே
ரமில்லையோ!

If there be time to wait while it is cooked, is there no time to wait while it cools?

---

134. அத்தைபடுகிற பாடடுக்குள்ளே குத்தியன் மொணை
ணிக்கழுகிறன்.

Whilst the mother endures tormenting affliction the adult son cries for the breast.

---

135. ஆனையைக்குத்தி சுளகாலே மூடுகிறது.

To cover the elephant one has killed with the hand—winnowing fan.

---

136. ஆடுவதுமாடிப் பாகற்காயும் பறித்தாயிற்று.

The dancing is over and the pakal fruit is plucked.

---

137. அளிளந்தலை கண்டாற் றோணி மிதக்கப்பாயும்.

When the dhoney finds her pilot unskillful she pitches.

---

138. ஆடுகாற்பணம் வால் முக்காற்பணம்.

The price of the sheep is a quarter of a fanam and the price of the tail is three quarters.

---

139. ஆனை கொடுத்துத் தோட்டிக்குப் பிணக்கா?

When the elephant is given shall a dispute ensue about the goad?

140. ஆய்ந்தோய்ந்து பாராதான் காரியந் தான் சாவக் கடவது.

Let the thing entered upon without consideration and pursued without due caution end in death.

---

141. ஆராருக்கு நானுதவேன் கூனுடம்பையும் புண்ணையுங்கொண்டு.

Being deformed and ulcerated for whom shall I be fit?

---

142. ஆடு கொழுத்தாலிடையனுக்கிலாபம்.

If the sheep grow fat it is advantageous to the shepherd.

---

143. ஆழமறியாமற் காலையிடாதே.

If ignorant of the depth do not put forth your feet.

---

144. ஆறுவடியச்சே கொல்லும் பஞ்சந் தெளியச்சே கொல்லும்.

The river kills when its flood subsides, famine destroys when it ceases.

---

145. ஆனைதழுவிய கையாலே ஆடு தழுவுகிறதோ?

Does the hand that has caressed the elephant caress the sheep?

---

146. ஆண்பிள்ளைகளெல்லாருமடுப்பூதித்தின்ற பஞ்சம் பெண்டுகளெல்லாரும் பிறக்கோடி காத்தபஞ்சம்.

A famine in which the men cook their own food whilst the women are waiting outside.

147. ஆர் குத்தியுமரிசியானாலே சரி.

No matter who pounds it if it be rice.

---

148. ஆண்டி மகனாண்டியானால் நேரமறிந்து சங்கூதுவான்.

If he be really the son of a mendicant he will blow the chank at the proper time.

---

149. ஆளானவர்களுக்கவிழ்ப்படாக் காலத்திலே காகாபசாசு கஞ்சிக்கழுகிறது.

The raven demon cries for canchy when the opulent cannot obtain even rice.

---

150. அண்டி தண்டியைத் தட்டினாற் பறப்பது சாம்பல்.

If the bottom of the mendicant be struck nothing but dust flies.

---

151. ஆனைவிழுந்தாற்கொம்பு புலிவிழுந்தாற்றண்டை.

When an elephant dies his tusk is left, and when a tiger dies his tail is left.

---

152. ஆகுங் காலமாகும், போகுங்காலம்போகும்.

It will happen in its time. It will go in its time.

---

153. ஆடுகொண்டவராடித்திரிவர், கோழிகொண்டவர் கூவித்திரிவர்.

They who have bought sheep will wander about, and they who have bought fowls will go about cackling.

154. ஆட்டுக்கு தீர்ந்தது குட்டிக்கு.

The lamb shears the fate of its dam.

---

155. ஆனை மேயுங் காட்டில் ஆட்டுக்குட்டி மேயவிடமில்லையா?

In the pasturage of the elephant is there not room for a lamb?

---

156. ஆமையுடனே முயல் முட்டையிடப்போய்க் கண்பிதுங்கிச் செத்தது

The hare in its attempt to lay eggs as the tortoise, strained its eyes out and died.

---

157. ஆனையுமானையும் முதுகுரிஞ்ச நடுவேயிருந்த கொசுகனுக்கு வந்தது சேதம்.

The destruction that happened to the eye-fly when the two elephants rubbed their sides together.

---

158. ஆனைபடுத்தாலுங் குதிரையினுயரம் வாராதா?

Even when lying down is not the elephant as high as the horse?

---

159. ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வாராதா?

Will not good fortune happen to the cat as well as to the elephant?

---

160. ஆட்டுவெண்ணெயாட்டு முழைக்குக் காணாது.

The butter yielded by a ewe is not enough for the churning-staff.

---

161. ஆமை பிடிப்பார் மல்லாத்துவார் நாமது சொல்லப் பாவம்.

They will catch the turtle and they will turn it on its back, but it is a sin for me to say so.

---

162. ஆறுகொண்டது பாதி தூறுகொண்டது பாதி.

One half is flooded and the other half is desert.

---

163. ஆனை கட்டிய தாள் வானை முட்டிய போர்.

The stalk is thick enough to tie an elephant to and the heap as high as heaven.

---

164. ஆராத்தாள் செத்ததும் விடிந்தாற்றெரியும்.

After day-break it will appear whose mother is dead.

---

165. ஆடிக்கருவழிந்தால் மழை குறைந்துபோம்.

If the embryo clouds of July fail there will be little rain.

---

166. ஆயிரம் பேரைக் கொன்றவனரைப்பரிகாரி.

He who has killed a thousand persons is half a physician.

167. ஆண்டிகள் மடங்கட்டுகிறது போலே.
As mendicants build choultries.

---

168. ஆனையுமறுகம் புல்லிலே தடக்கும்.
Even an elephant stumbles in the grass.

---

169. ஆனை கேட்ட வாயால் ஆட்டுக்குட்டி கேட்கிறதா?
Is it consistent for the mouth that has asked an elephant, afterwards to ask a kid?

---

170. ஆனையாயிரம் பெற்றலடியுமாயிரம் பெறுமோ?
If the elephant be worth a thousand will the mark of his foot be worth so much?

---

171. ஆடு நினைத்தவிடத்தோ பட்டிபோடுகிறது?
Is the fold to be placed where the sheep may wish?

---

172. ஆகுங் காயைப் பிஞ்சிலே தெரியும்.
The future fruit may be known before it is ripe.

---

173. ஆனதல்லாமலாவதுமறிவாரோ?
Do they know the future as well as the past?

---

174. ஆளில்லாத்துக்கமழுதாலுந் தீராது.
Though one weep for the absent his grief will not be assuaged.

175. ஆலைக் கரும்பு போலே.

As the sugar-cane in the press.

---

176. ஆகாசமட்டுமளக்தும் இருப்புத்தூணைச் செல்லரிக்குமா!

Can the white ant eat the iron pillar which is as high as the heavens?

---

177. ஆனையிருந்து அரசாண்டவிடத்தே பூனையிருந்து புலம்புகிறது.

The cat sits lamenting where an elephant sway-ed the sceptre.

---

178. ஆயிர நட்சத்திரம் ஒரு சந்திரனுக்குச் சரியா?

Are a thousand stars equal to one moon?

---

179. இரக்கப் போனாலுஞ் சிறக்கப்போ.

Though you are going a begging go decently attired.

---

180. இருந்த கால் மூதேவி நடந்தகால் சீதேவி.

A sluggish foot is the goddess of Poverty, an active foot is the goddess of Fortune.

---

181. இரும்பைக் கறையானரித்தாற் பிள்ளையைப் பருந்து கொண்டுபோகாதோ?

If the white ants could eat iron, would not the kite carry off the child?

182. இருக்கிறவன் செம்மையாயிருந்தாற் சிரைக்கிறவன் செம்மையாய்ச் சிரைப்பான்.

If he who is being shaved sit right, the barber will shave well.

---

183. இடங்கண்டால்விடுவானா யாழ்ப்பாணத்தான்!

With the chances of success in view, will the Ceylonese relinquish his object?

---

184. இறுப்பானுக்குப் பணமுங் கிடையாது உழைப்பானுக்குப் பெண்ணுங்கிடையாது.

The honest has no credit, and the industrious obtains no wife.

---

185. இறைச்சி தின்கிறேமென்று என்பையுங்கோத்துக் கட்டலாமா!

Shall I who eat flesh, wear a neck-lace of bones?

---

186. இல்லாதது பிறவாது அள்ளாதது குறையாது.

That which has no existence will not be reported, and that which is not taken from will not decrease.

---

187. இளைதானாலுமாடுவான் மூப்பு.

Though he is the youngest, he will act as the elder.

---

188. இடுவாரிடுவதையுங் கெடுவார் கெடுக்கிறது.

The wicked counteract the deeds of the benevolent.

189. இருந்தவனெழும்புமுன் நடந்தவன் காதவழி.

Ere he who was seated rose, the man on his feet went ten miles.

---

190. இலவம்பழத்தைக் காத்த கிளிபோலாயிற்று.

It has happened to me as to the parrot that waited the ripening of the pod of cotton.

---

191. இருந்தாற் பூனைபோல நடந்தாற் புலிப்போல.

He sits as a cat, but leaps as a tiger.

---

192. இடையன்வெட்டிய மரம்போல.

Like a tree that has been cropped by a herdsman.

---

193. இளகினவிரும்பைக் கண்டாற் கொல்லன் துண்டியை மிதத்தியடிப்பான்.

The smith elevating himself will beat the soft iron.

---

194. இருதலைக்கொள்ளியில் எறும்பு போல.

Like an ant on a fire-stick ignited at both ends.

---

195. இடாருக்குளகப்பட்டவெலிபோல.

Like a rat caught in a trap.

---

196. இருப்பாப்புக்கசையாத புளியங்காய் திருப்பாட்டுக்கசையுமா?

Will the tamarind fruit that has resisted the iron hook shake at the sacred song?

197. இருப்புச் சலாகைவிழுங்கிப்போட்டிஞ்சிச்சாறு குடித்தாற்றீருமா?

Will a draught of the solution of ginger digest the slab of iron one has swallowed?

198. இன்றைக்கென்னடி சட்டிநிரம்ப இன்றடியெடா குருட்டோளிமகனே.

Why woman! Is the pot full to-day? It is the first of July, thou son of a blind woman.

199. இழுவைகண்டாலடிப்பார்க்கவேண்டுமா?

When the track in which it was dragged is plain, would you look for foot-steps?

200. இரப்பானுக்கு வெண்சோறு பஞ்சமா?

Is white rice scarce to the mendicant?

201. இடதுகைக்கு வலதுகைதுணை, வலதுகைக்கிடது கை துணை.

The right hand is a help to the left, and the left to the right.

202. இறங்கச்சே நீச்சானலேறுகிறதெப்படி?

If on entering you are obliged to swim how will you reach the opposite shore?

203. இலையும் பழுப்புமெங்குமுண்டு.

New and withered leaves are every where to be found.

---

204. இல்லாதவன்பெண்சாதி எல்லாருக்குந்தோழியா?

Is the wife of the indigent common to every one?

---

205. இராசகீரியைக் காவுகிறதுபோலே.

As the royal mangose is borne by others.

---

206. இராசனேறிய குதிரைபோலே.

Like the horse ridden by the Emperor.

---

207. இடுகிற தெய்வம் எங்குமிடும்.

The beneficent deity is every where beneficent.

---

208. இம்மியனை நுண்பொருளீட்டிக்கம்மியருமூர்வர்களிறு.

By amassing wealth in the least conceivable degree, the artizans ride on the elephant.

---

209. இறைச்சி தின்கிறவர் கடுப்புக்கு மருந்தறிவார்.

One who eats flesh knows the medicine for the belly ache.

---

210. இறைத்தகிணறூறும், இறையாக்கிணறூறாது.

The spring will be good if the well be used, and indifferent if not used.

211. இரண்டு தோணிக்குக் கால் வைக்கிறது.
Like standing upon two boats.

---

212. இஞ்சிதின்ற குரங்கு.
The ape that has eaten ginger.

---

213. இனம்பிரிந்த மான்போலே.
Like a deer that has strayed from the herd.

---

214. இராப்பட்டினி கிடந்தவன் உரித்த வாழைப்பழம் விற்கிறதோவென்று விசாரித்தானாம்.
It is said that he who went to sleep over night fasting inquired on awaking where peeled plantains were to be sold.

---

215. இளங்கன்று பயமறியாது.
The young calf knows no fear.

---

216. இந்தவடிக்கெந்தநாய் பீச்சாது?
What dog will not stool under such a blow?

---

217. உதர நிமித்தம் வெகுகிருதவேடம்.
Various forms assumed for the sake of the belly.

---

218. உங்களுறவில் வேகுதலில் ஒருகட்டை விறகில் வெந்தாலென்ன?
What if I should prefer to be consumed by a faggot, rather than by your friendship?

219. உறியறவும் மூழிநாய் வரவும்.

The swinging tray falls, and the cropped dog comes at the same moment.

---

220. உடையவனிற் கைப்பற்றினவன் மிடுக்கன்.

The possessor is stronger than the owner.

---

221. உடையார்வீட்டில் நாய் மட்டைப்பரணிலேறினது போல.

Like the dog of the chief that ascended into the loft.

---

222. உண்ணாச்சொம் மண்ணாய்ப்போம்.

Property not used goes to ruin,

---

223. உடாப்புடைவை வண்டூதும்.

Apparel not worn is consumed by the moths.

---

224. உள்வீட்டிற்கடனும் உள்ளங்கையிற் சிரங்கும்.

Debt contracted in one's own habitation, and itch on the palm of the hand are alike bad.

---

225. உட்சுவரிருக்கப் புறச்சுவர் தீற்றுகிறது.

Beautifying the outside of the wall while the inside is neglected.

---

226. உடையவனில்லாச்சோம் ஒரு முழங்கட்டை.

The owner not being present the goods diminished a cubit.

---

227. உகமுடிய மழைபெய்தாலுமோட்டாங்கிளிஞ்சில் பயிராகுமா!

Though it should rain till the end of the world potsherds will yield no herbs.

---

228. உள்ளத்தையுங் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்.

He whose eyes are fire-brands, destroyed what there was.

---

229. உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

Though a little bird soar high will it become a kite?

---

230. உயிரோடு முத்தந்தராதவர் செத்தாலுடன் கட்டையேறுவாரா!

Will the woman who refuses to kiss the living husband mount the funeral pile with the dead?

---

231. உருக்கமுள்ள சிற்றத்தை யொதுக்கில்வாருங் கட்டியழ.

My affectionate aunt come aside and weep with me.

---

232. உழவுமாடானாலூருக்குள்ளே விலைப்படாதா?

If the ox be good for the plough, will it not fetch a price in its own country?

---

233. உடம்புழைந்த கழுதை உப்புக்களத்துக்குப்போயிற்றாம்.

The ass, stiff in body, is said to be gone to the salt-pans.

---

234. உலக்கை தேய்ந்துளிப்பிடியாயிற்று.

The rice pounder is worn as short as a chisel handle.

---

235. உடையார்வீட்டுமோருக்ககப்பைக்கணக்கென்ன?

What matters it to count the butter-milk spoons in the house of the chief?

---

236. உருத்திராட்சப் பூனை உபதேசம் பண்ணிற்றாம்.

The beaded cat gives religious advice it is said.

---

237. உங்கள் பெண்டுகள் கொண்டலடித்தாற் கண்கள் கொள்ளாது.

The eyes are ravished with the dancing of your women.

---

238. உடும்புக்கிரண்டு நாக்குண்டு, மனிதனுக்கிரண்டு நாக்குண்டா?

A guana has two tongues, has man also two?

239. உற்றது சொல்ல அற்றது பொருந்தும்.
Speaking the truth will retrieve the affair.

240. உரல்போய் மத்தளத்துக்கு முறையிட்டது.
The mortar goes to complain to the drum.

241. உண்டார் மேனி கண்டாற்றெரியும்.
It is evident in the appearance who is well fed.

242. உப்புவாணிகனுக்குத் தெரியுமோ கற்பூரவிலை.
Does the salt merchant know the price of camphor?

243. உறியிலே தயிரிருக்க ஊரெங்கும்போனாற்போல.
Like going round the country for curds when they may be had on his own shelf.

244. உத்தியோகத்துக்குத்தக்க சுகம்.
Circumstances regulate our wants.

245. உனக்குங் கீ உன் அப்பனுக்குங் கீ.
Key to thyself, and key to thy father.

246. உருசிகண்ட பூனை உறியையுறியைத் தாவுகிறது.
The cat that has tasted sweets jumps on the shelf.

247. உடையவன் சொற்படிகமுகடிகளைபறி.

Weed the arakenut-tree according to the owner's directions.

---

248. உதாரிக்குப் பொன் துரும்பு.

The beneficent regard gold as rushes.

---

249. உண்டி சுருங்குதல் பெண்டுக்கழகு.

It becomes a woman to eat little: or, Temperance is an ornament of woman.

---

250. உப்புக்கண்டம்போக்கடித்த பார்ப்பாத்திபோல.

As the brahminee who had lost her salted meat.

---

251. உன்சொல்லுக்குப்புமில்லைப் புளியுமில்லை.

Thy word is neither salt nor acid.

---

252. உள்ளத்தைவிற்று உல்லத்தைக்கொள்ளு.

Sell what you have and buy ulla-fish.

---

253. உள்ளாளுங் கள்ளாளும்.

The inmate is the rogue.

---

254. உறுதீங்குக்குதவாதவனுற்றவனு?

Is he a friend who helps not in adversity?

---

255. உற்சாகங்கொண்டு மச்சைத்தாவுகிறன்.

He leaps to the ceiling with animation.

256. உப்பிட்டவரையுலகமுள்ளவரைக்குந் நினைக்கும்.

The virtuous will remember the givers of salt whilst they have any being.

---

257. உடையவன் கண்ணோடாப்பயிரழியாதா!

Will not the crop perish if not watched by the owner?

---

258. உரலிலகப்பட்டதுலக்கைக்குத் தப்புமா!

Will that escape the pestle that has been put into the mortar?

---

259. உடம்பேறநனைந்தவருக்குட்கூதலென்ன!

What is internal cold to them who are drenched?

---

260. உழக்கிலே கிழக்கு மேற்கா!

Is the distinction of east and west important in a gill pot.

---

261. உண்ணுங் கீரையிலே நண்ணும்புல்லுருவி.

Moss among vegetables.

---

262. உறவுறவுதான் பறியிலே கைவையாதே.

The friendship is sincere it is true, yet do not put your hand into my sack.

---

263. உருவேறத்திருவேறும்.

Continued repetition of sacred verses advances merit.

264. உள்ளங்கையிலஞ்சு கொண்டை முடிக்கிறேன்.

I tie five knots of hair on the palm of my hand.

265. உங்களைக் கடலிலே கைகழுவினேன்.

I washed my hands of you in the sea.

266. உண்கிற சோற்றிலே நஞ்சு கலக்கிறது.

To mix poison with the rice one is eating.

267. உடுத்தபுடைவைதானே பாம்பாய்க்கடிக்கிறது.

The cloth one has put on bites like a serpent.

268. உலகிலே கள்ளனுக்கூரார் யாவர்பகை.

The whole community is at enmity with the thief.

269. உடம்பெங்குஞ் சுடுகிற தணலை மடியிலே கட்டுகி
றாயே.

Thou hast placed in thy bosom the embers that warmed the whole body.

270. உள்ளக் கருத்தை வள்ளலறியும்.

God knows the sentiments of the heart.

271. உள்ளத்தைச் சொல்லவுடம்பெல்லாம்புண்ணா!
Does your whole body become ulcerated because I tell you the truth?

---

272. உளுக்கார்ந்து படுத்துக்கொள்ளவேண்டும்.
Having seated yourself, lie down.

---

273. உன்சமரத்திலே குண்டுபாயாது.
Bullets will not fly in your battles.

---

274. உழுகிறவனிளப்பமானால் எருது மச்சினங்கொண்டாடும்.
The ox treats the weak ploughman as a brother-in-law.

---

275. ஊருக்கெல்லாஞ் சாத்திரஞ்சொல்லுகிறபல்லி கூழிலே விழுந்ததாம்.
It is said that the lizard that is the oracle of the whole village has fallen into the broth.

---

276. ஊத்தைக்கு விளங்காய் சேர்ந்ததுபோல.
As the pulp of the stone-apple added to filth.

---

277. ஊரிரண்டுபட்டாற் கூத்தாடிக்குப் பிழைப்பு.
If division prevail in a village it is good for the comedians.

---

278. ஊருக்கெளியவன் பிள்ளையார்கோயிலிலாண்டி.

The poor man of the village is a beggar in the temple of Ganesa.

---

279. ஊணன் கருமமிழந்தான் உலுத்தன் பெண்ணிழந்தான்.

The glutton lost his employment and the miser his wife.

---

280. ஊரிலெளியாரை வண்ணானறிவான், சாதிப்பொன்பூண்டாரைத் தட்டானறிவான்.

The washerman knows the poor of the village and the goldsmith those who wear ornaments of virgin gold.

---

281. ஊரோடுகிலொக்கோடு ஒருவனோடுகிற்கேட்டோடு.

When the whole country runs, run; when only one, enquire before you run.

---

282. ஊரையுலைமூடியால் மூடலாமா?

Can the country be covered with the lid of a rice pot?

---

283. ஊருடையவன் பெண்டிலைப் பிடித்தாலாருடனே சொல்லி முறையிடுகிறது!

If the owner of a country forcibly take the wife from her husband, to whom can he appeal?

---

284. ஊரிலொருத்தன்றோழன் ஆருமற்றடாரம்.

One friend may be found in a country. She who has no acquaintance is fit for a wife.

285. ஊசிபோலே மிடறுங்கோணியல்போலே வயிறும்.

The throat like a needle, the belly like a bag.

---

286. ஊராரெருமைபால்கறக்கிறது நீயுமூட்டுகிறாய் நானுமூட்டுகிறேன்.

The buffaloes of the country yield milk, and you and I suck.

---

287. ஊசி பொன்னானாலென்ன பெறும்!

'Though the needle were of gold, what would it fetch?

---

288. ஊத்தைபோகக்குளித்தவனுமில்லை, பசிபோகத்தின்றவனுமில்லை.

No one ever washes himself so as never to require it again, nor does any one ever eat so as never to hunger again.

---

289. ஊசிகோக்கிறதற்கூரிற் துளாவாரமேன்.

Why so much ado in the place about threading a needle?

---

290. ஊருக்கொருதேவடியாள் யாருக்கென்றாடுவாள்.

One dancing girl only being in the country, she has to exhibit her art to every one.

---

291. ஊரானுடைமைக்குப் பேயாய்ப் பறந்தால்வருமா!

Though one flies with the swiftness of a demon in order to obtain another's property, will he get it?

292. ஊரோச்சம் விடுபட்டினி.

Distinguished abroad and starved at home.

---

293. ஊழுமுற்சாகமுமொத்துக்கொள்ள வேண்டும்.

Destiny and perseverance must co-operate together.

---

294. ஊருடன் பகைக்கில் வேருடன் கெடும்.

If one hate his country he will be extirpated.

---

295. ஊணற்றபோதே உடலற்றுப்போம்.

When food is exhausted the body wastes.

---

296. ஊணற்றபோதே உறவற்றது.

When there is no food there is no friendship.

---

297. ஊணுக்கு முந்தவேண்டுங்கோளுக்குப் பிந்தவேண்டும்.

Be first at the feast and last at slander.

---

298. ஊண்பாக்கொழிய வீண்பாக்காகாது.

Betel is not good except after food.

---

299. ஊர்கூடிச் செக்குத்தள்ளவேண்டுமோ!

Is it necessary to assemble the whole country to turn the oilman's press?

---

300. ஊழிபேரினுமுக்கமதுகைவிடேல்.

Do not remit your efforts though the world should end.

---

301. ஊன்றக்கொடுத்ததடியென்னுச்சியையுடைக்கிறது.

The staff I gave for his support breaks my head.

---

302. ஊமையுமூமையுமூக்கைச் சொறிகிறது.

The dumb on meeting scratch the nose.

---

303. ஊருக்கோ பால் வார்த்துண்கிறதுடம்பிற்கோபால் வார்த்துண்கிறது.

Is it on account of others, or for the welfare of the body that rice and milk is eaten?

---

304. ஊமையுமல்லச் செவிடுமல்லவென்றிருக்க வேண்டும்.

Be neither dumb nor deaf.

---

305. ஊர்க்குருவிமேலே ராமபாணந்தொடுக்கலாமா?

Why direct Rama's arrow at a small bird?

---

306. ஊசிக்குக்கள்ளனுடனே வருவான்.

He who steals needles may easily effect his purpose.

307\. என் முதுகிற்றோல் உனக்குச் செருப்பாயிருக்கும்.

The skin of my back is for your feet.

308\. எருதில்லாதிருந்தாற் பசுப்பத்தினி.

Virtue is found where the occasions of vice are denied.

309\. எட்டியெட்டிப் பார்ப்பாரும் ஏணிவைத்துப் பார்ப்பாருங் குட்டிச் சுவராலே குனிந்து நின்று பார்ப்பாரும்.

Some peep lifting up the head, some peep standing on a ladder, and others peep leaning over a low wall.

310\. எளியவனுக்குப் பெண்ணாயிருக்கிறதிலும் வலியவனுக்கடிமையாயிருக்கிறது நலம்.

It is better to be a slave to the wealthy, than the wife of the indigent.

311\. எறும்பின் கண்ணுக்கு எருமை மூத்திரம் ஏகப்பெருவெள்ளம்.

The urine of the buffalo is a complete deluge to the eye of the ant.

312\. எல்லாவாட்டோட்டுங் குல்லாவுக்குள்ளே.

The value of the canoe is in the outrigger.

---

313. எண்ணறவெண்ணியெழுத்தற வாசித்தாலும் பெ
ண்மதி பீதிற்றும்.

Though well read in literature the counsel of a woman would lead to the eating of ordure.

---

314. எளியாரை வலியார்கேட்டால் வலியாரைத் தெய்
வங்கேட்கும்.

If the powerful afflict the powerless, God will afflict them in return.

---

315. எண்சாணுடம்பிற்குச் சிரசே பிரதானம்.

The head is the chief part of the eight-span body.

---

316. எள்ளேன்காய்கிறது எண்ணெய்க்கு எலிப்புழுக்
கையேன் கூடக்கிடந்த குற்றத்திற்கு.

Is it not for oil that rape-seed is dried, and is it not on account of its being where it ought not, that the rat dung dries along with it?

---

317. எந்த ஆயுதமுந் தீட்டத்தீட்டக் கூரும்.

The more any instrument is whetted the sharper it becomes.

---

318. எருதுந் தன் புண்ணழற்சி காக்காயுந்தன் பசியழ
ற்சி.

The ox suffers from the smarting of its sores, and the crow that picks them smarts with hunger.

319. எதிர்த்தவனேழையென்றாற் கோபஞ் சண்டாளி.

If the antagonist be poor, the opposed will be violently enraged.

---

320. எய்தவனிருக்கவம்பை நோகிறது போல.

It is like being offended with the arrow, not the archer.

---

321. எண்ணெய்ச்செலவொழியப் பிள்ளை வளர்த்தியில்லை.

The oil is expended but the child does not grow.

---

322. எழுதாவிதிக்கு அழுதால் வருமா?

Will weeping produce that which has not been predestined?

---

323. எல்லாரும் மனிதரா கல்லெல்லாம் மாணிக்கமா?

Are all men, men, or are all stones rubies?

---

324. எச்சிற்கையாலே காகந் துரத்தாதவன்.

One who won't scare away a crow with his unwashen hand.

---

325. ஏதாகில்பேசினால் அகப்பைச் சூனியம்வைப்பேன்.

If you speak, I will bewitch you with the spoon.

---

326. எருமையீனுமுன்னந் நெய்விலை கூறுகிறான்.

He publishes the price of the ghee before the buffalo calves.

---

327. எழுதிவழங்கான் வாழ்க்கை கழுதை புரண்டகளம்.

The affairs of the man who keeps not his personal accounts, are like the place where the ass has rolled itself.

---

328. எலிக்குப்பிராணாவத்தைபூனைக்குக்கொண்டாட்டம்.

It is death to the rat, and sport to the cat.

---

329. எலியழுகிறதென்று பூனைவிடுமோ?

Will the cat leave her hold at the cries of the rat?

---

330. எண்ணிச் செய்பவன் செட்டி எண்ணாமற் செய்பவன் மட்டி.

He who acts with fore-thought is a man of business, but he who acts without it, is an idiot.

---

331. எந்தவாக்குப் போனாலுஞ் சந்தவாக்குப்போகாது.

Whatever changes may take place, the marks of low breeding cannot be obliterated.

---

332. எருமையிருந்தல்லோ பால்கறக்க வேண்டும்.

Are we not to milk where there is a cow?

---

333. எளியவனைக் கண்டு புளியங்காய் பறிக்கிறது.

Seeing the owner of it to be weak and defenceless, plucking the tamarind fruit.

---

334. எருமைச் சாணகம் எக்கியத்துக்குதவுமா?

Will the dung of the buffalo be available for a sacrifice?

---

335. எண்ணித்துணிவதுகருமந் துணிந்து பின்னெண்ணுவதிழுக்கு.

To act on due consideration is wise, to act and then consider is disadvantageous.

---

336. எலி பூனைக்குச் சலாம்பண்ணுவது போல.

As the rat did obeisence to the cat.

---

337. எருது பரதேசம்போனது போல.

Like the ox gone astray.

---

338. எரிகிறதீயிலே எண்ணெய்விட்டது போல.

Like pouring oil on the fire.

---

339. எலுமிச்சங்காய்க்குப் புளியேறுகிறதுபோல.

As the lemon gradually acquires its acidity.

---

340. எலும்பு கடிக்கிற நாய் இரும்புகடிக்குமா?

Will the dog that gnaws a bone gnaw iron?

341. எலி அறுக்குந் தூக்கமாட்டாது.
The rat nibbles but carries nothing off.

---

342. எலி வேட்டைக்குத் தவிலடியா?
Must the drum be beaten at the hunting of rats?

---

343. எலி பூனையை வெல்லுமா?
Can the rat overcome the cat?

---

344. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்.
How may we prosper? By agreeing together.

---

345. எள்ளுக்குளெண்ணெய் போல.
As the oil in the rapeseed.

---

346. எலிப்பழையானாலுந் தனிப்பழைவேண்டும்.
A separate hole, tho' only the hole of a rat.

---

347. எல்லாமறிந்தவனுமில்லை, ஒன்றுமறியாதவனுமில்லை.
No one knows all things and no one but knows something.

---

348. எண்ணிச் செய் செட்டு எண்ணாமற் செய் வேளாண்மை.
The merchant's business requires forethought the farmer's none.

349. எறும்பு நடக்க நடக்கக் கல்லுங் குழியாகும்.
The continual traversing of ants will wear even a stone.

---

350. எலித்தலையிற் கோடரி விழுந்தது போல.
As the axe fell on the head of the rat.

---

351. எடுக்க முன்னங் கழுதை பிறுக்கிட்டதாம்.
The ass brays before it is laden.

---

352. என்ன சொன்னாலும் என் புத்திவிடுகிறதில்லையெ
ன்கிறாள்.
Whatever is said she declares she will not relinquish her own judgment.

---

353. எங்கே அடித்தாலும் நாய்க்குக் காலிலே முடம்.
No matter where the dog may receive the blow, he shows his lameness in his leg.

---

354. எந்தப்புற்றிலே எந்தப் பாம்பு இருக்கிறதென்று தெரியும்.
He knows what snake is in any hole.

---

355. எடுத்த சுமை சுமந்தல்லோ இறக்க வேண்டும்.
The burden must be set down after it has been carried to its destination, must it not?

---

356. எலிக்குப் பயந்து வீட்டைச் சுட்டாற் போல.

Like burning down one's house for fear of the rats.

---

357. எலிக்குமணியமறுக்கிறது.

It is the business of the rat to nibble.

---

358. எருவுக்குப்போனவன் எலுமிச்சம்பழமெடுத்தது போல.

It is like one taking a lemon who had gone for dung.

---

359. எச்சிலைக் கழுவியுஞ் சுற்றத்திலே வார்.

Though the washing of the hands be all you can do, pour even that out to relatives.

---

360. எரிகிற கொள்ளியிலே எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?

Which is the best of the burning fire-brands?

---

361. எட்டியுடனே சேர்ந்த இலவுந் தீப்பட்டது.

The cotton tree is consumed with the poisonous tree.

---

362. எழுந்திருப்பான் காலில்லை.

He can rise, but is without feet.

---

363. எண்சாணுடம்பும் ஒருசாணுடம்பானேன்.

The eight span body is become one span.

364. என்குடி கெட்டதுமுன்குடி கெட்டதும் விடிந்தாற் றெரியும்.

Whether my household is destroyed or yours will be known at day-break.

365. எல்லாவேலையுஞ் செய்வான் செத்தாற் பிழைக்க மாட்டான்.

He can do every thing, but when dead, he cannot resuscitate himself.

366. எட்டிபழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன?

What is the fruitfulness of the poison tree? what is the prosperity of the stingy?

367. எருமையிலும் வெள்ளாடு ஏறக்கறக்குமோ?

Can you obtain more milk from the goat than from the buffalo?

368 எங்கேபுகை யுண்டோவங்கே யழலுண்டு.

Wherever there is smoke there is fire.

369. எருதின்வலி காகமறியுமோ?

Does the crow consider the power of the ox?

370. எல்லாருங் கப்பலேறியாயிற்று இனியம்மானார் க
ப்பலேறிப் பொற்பட்டங் கட்டப்போகிறார்.

All who embarked have abandoned the enterprize, now my uncle is embarking to obtain head ornaments.

---

371. எறிகிறது முயலுக்குப் படுகிறதுபற்றைக்கு.

Throwing at a hare and hitting a bush.

---

372. எலுமிச்சைக் கனிக்குப் புளிசேர்க்க வேண்டுமா!

Is it necessary to add acid to the lemon?

---

373. எண்ணியகுடிக்கொரு மின்னியகுடி.

An illustrious family among the eminent.

---

374. எல்லாருக்குஞ் சனியன் தும்புபோலே எனக்குச்
சனியனெருமை போலே.

Saturn is as a rush to others, but to me he is like a buffalo.

---

375. எனக்கட்டமத்துச் சனிபிடித்தது.

Saturn has seized me at an inauspicious juncture.

---

376. எருதுமறைவிற் புல்லுத்தின்கிறாயா?

Dost thou eat grass concealed by an ox?

---

377. என்னதின்றாலும் அதற்குமேலே நாலுபேரிச்சம்பழந்தின்ன எல்லாமடிபடும்.

Eat as much as you will; four dates eaten afterwards will settle the whole.

---

378. எச்சிலைக் குடித்துத் தாகந்தீருமா?

Can one quench his thirst by drinking spittle?

---

379. என்னீரலைக் கருக்கரிவாள் கொண்டறுக்கிறது.

Cutting my liver with a sharp saw.

---

380. எலியம்மணத்தோடே போகின்றதென்கிறன்.

He says that the rat goes naked.

---

381. எலும்பைத்தின்று சதையைக் கொடுத்து வளர்த்தாயே.

Having eaten the bones thyself, thou hast nourished them with the flesh.

---

382. எனக்கூணுமில்லை யுறக்கமுமில்லை.

Neither food nor sleep.

---

383. எனதுநாட்களெல்லாம் ஊமை கண்ட கனாப்போலாயின.

All my days are lost as the dream of the dumb.

---

384. எடுப்பாரும் பிடிப்பாரு முண்டானால் இளைப்புந் த விப்பும் மெத்தவுண்டு.

Where there are many attendants sufferings are excessive.

---

385. எலிபுற்றெடுக்கப் பாம்பு குடிகொள்ளுகிறது.

The rat makes the hole, but the snake takes possession.

---

386. எண்ணமெல்லாம் பொய்யாதும் லிகிதம் மெய்யா தும்.

All conjecture is false, writing is true.

---

387. எட்டினால் மயிர்பிடிக்கிறது எட்டாதிருந்தாற் கால் பிடிக்கிறது.

Seizing by the hair if he can reach, but if not by the feet.

---

388. எலியைக்கண்டு பூனை ஏங்கிவேங்கிக்கிடக்கிறதாம்.

It said that the cat is alarmed at the sight of a rat.

---

389. எள்ளுங்கரும்பும் நசுக்கினாற் பலனுண்டு.

Rape seed and sugar-cane are profitable when crushed.

---

390. எடுத்தார் கையிற் பிள்ளை.

A child in the arms.

---

391. எட்டாப்பூத் தெய்வத்துக்கு.

The flower which is out of the reach is dedicated to God.

---

392. எள்ளுக்கேழுழவுழுகிற வேளை வெள்ளாளா கொள்ளுக்கொருழவுழுது பயிர்ச்செய்.

O poor plough-man who ploughest seven times for rape seed, plough once and sow gram.

---

393. எண்ணெய்க்குடத்தைச் சுற்றுமெறும்புபோல.

Like the ants round the oil pot.

---

394. என்முகத்திற் கரிபூசினாயே.

You have rubbed charcoal on my face.

---

395. எறும்பு முட்டை கொண்டு திட்டையேறின் மழை பெய்தது.

It has rained, for the ants are carrying their eggs to higher ground.

---

396. எத்தனைதரம் விளக்கினாலும் பித்தளைநாற்றம்போகாது.

The smell of brass will remain however it is burnished.

---

397. எதெப்படிப் போனாலுந் தன்காரியந் தான்பார்க்க வேண்டும்.

No matter what becoms of others' affairs attend to your own.

398. எறும்புக்குந் தன்கையாலெண் சாணுடம்பு.

The ant, measured by its own hand, is eight span long.

---

399. ஏரி நிறைந்தாற் கரை கசியும்.

If the pond be full the border will be moist.

---

400. ஏண்டா முடிச்சவிழ்த்தாய் என்பசியுனக்குத் தெரியுமா?

O thou hast untied the knot: art thou aware that I am hungry?

---

401. ஏறவிட்டேணியை வாங்கினது போல.

Like removing the ladder one has ascended.

---

402. ஏறப்படாத மரத்திலே எண்ணப்படாத காய்.

The fruit on a tree no one has ascended is without number.

---

403. ஏழையழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சரி.

The tears of the oppressed are like sharp swords.

---

404. ஏர் பிடித்தவனென்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியவாட்டி.

What can the plough-man do? She who has the cooking utensils is wealthy.

---

420. ஒரு குடம்பாலுக்கொரு துள்ளி உறைமோர்.

One drop of butter-milk is put into the pot of milk.

---

421. ஒருதாயில்லாதவருக்கூரெல்லாந் தாய்.

The whole country is mother to the motherless.

---

422. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கிறது.

One grain of boiling rice is a sample of the whole pot.

---

423. ஒருகை தட்டினாலோசையா? இருகைதட்டினாலோசையா?

Can the sound of clapping be produced with one hand or with two?

---

424. ஒருவர் அறிந்தால் இராசியம் இருவரறிந்தாற் பராசியம்.

If one only knows the matter it is secret, if two it is public.

---

425. ஒழுக்கு வீட்டிலே வெள்ளம் வந்தது போல.

As a flood in the leaky house.

---

426. ஒரு சாண்காட்டிலே ஒரு முழத்தடி வெட்டலாமா?

Can a stick a cubit long be cut among shrubs a span high?

427. ஒளிக்கப் போயுந் தலையாரி வீட்டிலேயொளித்தாற் போல.

As one seeking concealment hides himself in the house of the Chief.

428. ஒருவனைப்பற்றி ஓரகத்திரு.

Abide where you have a friend.

429. ஒருகாசு கொடாதவனொருவராகன் கொடுப்பானா?

Can he who cannot give a cash pay a mohur?

430. ஒருகாசென்றவிடத்திலழுகிறான்.

He weeps when the word cash is pronounced.

431. ஒடிந்த கோலானாலும் ஊன்று கோலாகும்.

Though a broken staff it may serve as a walking stick.

432. ஒரு மிளகுக்கு ஆற்றைக்கட்டியிறைத்தசெட்டி.

A merchant that drained the river and drew off the water, in order to find a grain of pepper he had lost.

433. ஒரு குண்டிலே கோட்டை பிடிக்கலாமா?

Can a fort be taken with one bullet?

434. ஒருகூடு முடைந்தவனென்பது கூடு முடைவான்.
He who has platted one basket may make nine.

---

435. ஒளியில்லாவிட்டாலிருள். இருளில்லாவிட்டால் ஒளி.
When there is no light there is darkness. When no darkness there is light.

---

436. ஒருக்காற் செய்தவனிருக்காற் செய்வான்.
He who has done a thing once may perform it again.

---

437. ஒருவிரல் நொடியிடாது.
One finger will not snap.

---

438. ஒருமிப்பில்லாத குடி ஒருமிக்கக் கெடும்.
The divided household will have an undivided destruction.

---

439. ஒருதலை வழக்கு நூலிலுஞ் செவ்வை.
The evidence in a suit where only one party is heard; is straighter than a line.

---

440. ஒருகோபம் வந்து கிணற்றில் விழுந்தால் ஆயிரஞ் சந்தோஷம் வந்தாலுமெழும்பலாமா?
When one has fallen into a well through a sin-

gle fit of anger, with a thousand joyous considerations lift him out?

---

441. ஒள்ளியர் தெள்ளியராயினுமூழ்வினை மெள்ளநுழைந்துவிடும்.

Though ever so prudent and skilful the effects of destiny will insinuate themselves.

---

442. ஓடியுங் கிழவிக்குப் பிறகேயா?

With all his running is he behind the old woman?

---

443. ஓடியோருகோடி தேடுவதிலுமிருந்தொரு காசுதேடுவது நலம்.

A single cash acquired in quietude is worth a crore acquired by bustle.

---

444. ஓடம்விட்டவிடமடிச்சுடும் அடிச்சுட்டவிடமோடம் விடும்.

The foot may be burnt where ships have sailed and ships may sail where the foot was burnt.

---

445. ஓட்டை மணியானாலும் ஓசை நீங்குமா?

Though a bell be porous will it lose its sound?

---

446. ஓடிய முயற் பெரிய முயலல்லவோ?

The hare that has escaped is a great one, is it not?

447. ஊருக்கொரு வழியா?
Is there only one road to the country?

---

448. ஓடவும் மாட்டேன் பிடிக்கவும் மாட்டேன்.
I will neither run, nor will I take hold.

---

449. ஓந்தி வேலிக்கிழுக்கின்றது தவளை தண்ணீருக்கிழுக்கின்றது.
The lizard seeks the hedge and the frog the water.

---

450. ஓடங் கடந்தாலோடக்காரனுக்கொருசொட்டு.
A cuff for the boatman after crossing the river.

---

451. ஓடம் வண்டிலேறும், வண்டிலோட மேறும்.
A boat may be conveyed in a cart, or a cart in a boat.

---

452. கருப்பங் கட்டியிலுங் கல்லிருக்கும்,
There are stones even in sugar.

---

453. கயிறில்லாப் பம்பரம்போல.
Like a top without a string.

---

454. கடைத் தேங்காயெடுத்து வழிப்பிள்ளையாருக் கடித்தசம்பந்தம்.
Like taking a cocoanut from the bazaar and breaking it to Ganesa by the way-side.

455. கறக்கின்றது உழக்கு உதைக்கின்றது பல்லுப்போக
Yielding half a pint and kicking out the teeth.

---

456. கடன் காரரை வைத்தகழுவுண்டா?
Is there a stake for transfixing debtors?

---

457. கண்ணைக் கெடுத்த தெய்வம் புத்தியைக் கொடுக்கும்.
The God that destroyed the eye will give wisdom.

---

458. கள்ளமாடு சந்தைபோகாது.
The stolen cow will not appear in the market.

---

459. கந்தையானாலுங் கசக்கியுடுத்து.
Though only a rag put it on neatly.

---

460. காரணந் தப்பினால் மரணம்.
If he fail in his feat it is death.

---

461. கற்றவிடத்திலே வித்தைகாண்பிக்கலாமா?
Can learning be exhibited where it is acquired?

---

462. கண்டுங் காணவில்லைக் கேட்டுங் கேட்கவில்லை யென்றிருக்க வேணடும்.
Seeing, see not, hearing hear not.

Add to your expenses a quarter of a fanam for fragrant powder.

942. செங்கோல்கோடவெங்குங்கோடும்.
Obliquity in the ruler leads to general depravity.

943. செல்லாப்பணமெங்குஞ் செல்லாது.
Bad coin will not pass any where.

944. செட்டிக்குவெள்ளாண்மை சென்மப்பகை.
There is a radical contrariety between agrigulture and a merchant

945. செம்பாலைக்குக்கரும்பாலைவலிது.
Black iron wood is stronger than red.

946. செருப்பாலடித்துக் குதிரையுங் குடையுங்கொடுக்கிறது.
A horse and umbrella to one after beating him.

947. செட்டிக்குமிறுத்துப்பைக்குமிறுத்தேன்.
I paid both the Chitty and the bag.

948. செய்தார்க்குச் செய்வதுசெத்தபிறகோ?
Shall benefits be requited after death?

949. சென்மக்குருடனுக்குக்கண்கிடைத்ததுபோல.
As one born blind received sight.

---

950. செம்புநடமாடினாற் குயவன் குடிபோய்விடுவான்.
When metal utensils are used, potters may remove their residence.

---

951. சேற்றிலே புதைந்தயானையைக் காகமுங் குட்டும்.
Even the crow will assault with its bill the elephant that sticks in the mud.

---

952. சேதநினைவிற்குப் பூதஞ் சிரிக்கும்.
A demon will laugh at a destructive thought.

---

953. சேற்றிலே நாட்டியகம்பம்போல.
Like a pole fixed in mud.

---

954. சேற்றிலே கிடக்கிற எருமையைத் தூக்குவானோ?
Will he lift up the buffalo that lies in the mud.

---

955. சைக்கினைகாட்டிச் சண்டைக்கழைக்கிறான்.
He calls me to fight by beckoning with the hand.

---

956. சொருகிக்கிடந்த அகப்பையுஞ் சோறள்ளப்புறப்பட்டது.

The ladle that was thrust into the thatched roof as useless is gone to serve out rice.

---

957. சொல்வார்சொன்னாற் கேட்பார்க்குமதியில்லையா?

When another speaks has the hearer no understanding.

---

958. சொன்னதைச் சொல்லுங்கிளி.

A parrot that repeats what was said.

---

959. சொல்லிச் செய்வார் நல்லோர், சொல்லாமற்செய்வார் பெரியோர், சொல்லியுஞ்செய்யாரசடர்.

They who say and do are good; they who say not and do are great, but they who say and do not are bad.

---

960. சொன்னதிருக்கச் சுரைபிடுங்குகிறாய்.

Neglecting what is commanded thou pluckest gourds.

---

961. சொற்கத்தேபோகிலுங் கக்கத்தேறட்டணமேன்?

Of what use is a spinning wheel to one who is going to heaven?

---

962. சொன்னால்வெட்கமழுதாற்றுக்கம்.

When speaking, ashamed; and when weeping, grieved.

963. சோறிடுகிறவன்றன்னாளானாலடிப்பந்தியென்னத லைப்பந்தியென்ன!
When the distributor of rice at the feast is one's own servant, what matters it whether we have the lowest or the highest seat.

---

964. சோற்றைக்கொடுத்துக் கழுத்தையறுக்கிறது.
To cut the throat after giving rice.

---

965. சோற்றிலே கல்லெடுக்கமாட்டாதவன் மோகனக் கல்லெடுப்பானோ!
Will he who cannot pick out a stone from rice lift the transverse stone of a temple vestibule.

---

966. சோற்றுச்சரையோடுதோற்றிவந்த நுள்ளான்.
The ants appeared with the bundle of rice tied up in leaves.

---

967. சோற்றுக்குக் கேடுமண்ணுக்குப்பாரம்.
Loss to the rice and weight to the earth.

---

968. சோம்பேறிக்கு வாழைப்பழந் தோலோடே
A plantain fruit unpealed to the indolent.

---

969. ஞானமெல்லாமொருமுட்டை உலகமெல்லாமொரு கோட்டை.
All wisdom is a bundle and all the world is a fortress.

970. தம்பிகால்நடையே பேச்சுப் பல்லக்கிலே.

The fellow walks on foot, but his words are in a palankeen.

971. தழைந்த மரத்துக்கு நிழலுண்டு பிள்ளைப்பெற்றவளுக்குப் பாலுண்டு.

A flourishing tree affords a shade; and a woman who has born a child has milk.

972. தலையிலெழுத்திருக்கத்தந்திரத்தால் வெல்லலாமா?

Can we overcome by stratagem when fate has determined otherwise?

973. தம்பிபேச்சைத் தண்ணீரிலேயெழுதவேண்டும்.

The talk of the fellow ought to be written in water.

974. தனக்குப் பிறந்தபிள்ளை தவிட்டுக்கழுகிறதாம் ஊரார்பிள்ளைக்கூட்டுக் கலியாணமாம்.

It is said that her own child cries for bran, whilst another's is distinguished by festivities.

975. தகப்பன்வெட்டின கிணறென்று தலைகீழாய் விழுவார்களா?

Will they leap into the well because it was dug by the father?

976. தன்னப்பந்தன்னைச்சுடும் ஓட்டப்பம்வீட்டைச்சுடு
ம்.

Her own bread will burn herself, and the cake baked in the chatty will burn the house.

---

977. தலையெழுத்துக்குத்தலையைச்சிரைத்தாற்போதுமா!

Will the destiny inscribed on the scull be a-verted by shaving the head?

---

978. தன்வினைதன்னைச்சுடும்.

The deeds of man will burn himself.

---

979. தவிடுதின்பவனை எக்காளமூதச்சொன்னாற்போல.

Like requesting the man who eats bran to blow a trumpet.

---

980. தட்டான்தாய்ப்பொன்னிலும் மாப்பொன்களவெ
டுப்பான்

The gold-smith will not fail to steal a twentieth part of the gold confided to him, even though given to him by his mother.

---

981. தடிக்குமிகுந்த மிடாவா?

Are there any earthen pots that will resist the blows of a stick?

---

982. தலையிருக்க வாலாடுமா?

Will the tail wag whilst the head is there?

983. தங்கமுடிசூட்டினாலுந் தங்கள் குணம்விடார்கசடர்.

The low will not abandon their inclinations although invested with a golden crown.

---

984. தட்டிப்பேசுவாரில்லாதிருந்தாற் றம்பிசண்டப்பிர சண்டம்.

Most eloquent when no one is found to dispute.

---

985. தன்னூர்க்கியானை அயலூருக்குப்பூனை.

An elephant in his own country and a cat in a strange country.

---

986. தன் வாயாலேதான்கெட்டான்.

He perished by his own word.

---

987. தலைமேலே தலையிருக்கிறதா?

Is there a head above the head?

---

988. தன்னைப்புகழாத கம்மாளனுமில்லை.

There is no smith who does not boast of himself.

---

989. தங்கத்தைக் குவிக்கிறேனென்றாலுந் தன்புத்திவிடு கிறதில்லையென்கிறான்.

He persists in his judgment although I say I am heaping up gold.

990. தன்குற்றமிருக்கப் பிறர்குற்றம்பார்க்கிறதா!
Is it to censure others whilst guilty himself?

---

991. தலைகீழாயிருந்து தபசுசெய்தாலுங் கூடுகிறகாலம் வந்துதான்கூடவேண்டும்.
Although one perform the most abject penance he must wait the appropriate time for effecting his purpose.

---

992. தன்னிலத்திற்குறுமுயல் தந்தியிலும்வலிது.
Even the hare in his own place is stronger than an elephant.

---

993. தண்டிலேபோனாலிரண்டிலேயொன்று.
When going to war one of two.

---

994. தனக்குச் சந்தேகம் அடைப்பைக்காரனுக்கிரட்டைப்படி.
Uncertain of a supply for himself, a double portion for his servant.

---

995. தன் பெண்டாட்டியைத்தானடிக்கத் தலையாரியைச் சீட்டுக் கேட்ட சம்பந்தம்.
As one asked a warrant of the magistrate to beat his own wife.

---

996. தனக்கழகு மொட்டை பிறர்க்கழகு கொண்டை.

Personal comfort is secured by a shaven head, but the knot is more beautiful to the eyes of others.

---

997. தன்பலங்கொண்டம்பலமேறவேண்டும்.

One must gain ascendency in the assembly by one's own strength.

---

998. தன்பல்லைக்குத்திப் பிறர்மூக்கில் வைக்கலாமா?

Is it right to pick his own teeth and put the dirt to the nose of another?

---

999. தன்வீட்டுக்கதவைப் பிடுங்கி அயல் வீட்டுக்கிரவைத்தாற்போல.

Like breaking down his own door and placing it in a neighbour's house.

1000. தவிட்டைநம்பிப்போகச்சம்பாவரிசியைநாய்கொண்டுபோயிற்று.

Going in quest of the expected bran his fine rice was carried off by the dog.

1001. தட்டானுஞ்செட்டியுமொன்று சட்டியும்பானையுமண்.

The goldsmith and merchant are one and the bowl and the bason are clay.

1002. தச்சவீட்டிற் பாற்சோற்றை நச்சாதே வெள்ளாளா.

O husbandman! covet not the rice milk of the carpenter.

1003. தட்டார்தெருவிலூசிமாற்றலாமா?

Can a needle be changed in the silver-smith street?

1004. தன்னூருக்கன்னம் பிறவூருக்குக் காகம்.

A swan in his own and a crow in a foreign country.

1005. தலைக்குமிதந்த தண்ணீர் சாணோடியென்னமுழ மோடியென்ன?

If the water be above the head it is of no consequence whether it be a span or a cubit.

1006. தகப்பனுக்குக்கட்டக்கோவணத்துக்குவழியில்லை மகன் தஞ்சாவூர்மட்டுநிலபாவாடைபோடச் சொன்னானாம்.

It is said that the son requested cloth to be spread on the road to Tanjore whilst his father was destitute of a waist cloth.

1007. தலைக்குத்தலைநாயகம்.

Each one superior to the other.

1008. தண்ணீரிலிருக்கிற தவளை குடித்ததைக்கண்டதார் குடியாததைக்கண்டதார்.

Who knows whether the frog in the water drank the water or not.

1009. தயிருக்குச்சட்டியாதாரஞ் சட்டிக்குத்தயிராதாரம்.

The bowl supports the curds and the curds support the bowl.

1010. தன்வீட்டுவிளக்கென்று முத்தமிட்டாற் சுடாதா?

Because his own, will not the flame of a lamp burn him who kisses it?

1011. தலைவமயக்கஞ் சருவமயக்கம்.

All is confusion when the chief is deluded.

1012. தனக்கு மிஞ்சினது தன்மம்.

What is left belongs to charity.

1013. தன்னைக்கொல்லவருகிற பசுவைக்கொல்.

Kill even the cow that attempts to kill you.

1014. தனக்கென்னச்சொன்னால் நாய்வெடுக்கென்னப் பாயும்

No matter what advice it may receive, the dog flies at one.

1015. தம்பியுழுவான் மேழியெட்டாது.

The youngster can plough but cannot reach the handle of the plough.

1016. தன்னுயிர்போல மன்னுயிர்க்கிரங்கு.

Regard the lives of others as your own.

1017. தவளை தன்வாயாற்கெடும்.

The frog is destroyed by its own mouth.

1018. தண்ணீர்வெந்நீரானாலுநெருப்பையவிக்கும்.

Though water be heated it will quench fire.

1019. தம்பிபிறக்கத்தரைமட்டமாயிற்று.

When the youngster was born all was destroyed.

1020. தன்மமேதலைகாக்கும்.

Charity will preserve the head.

1021. தன்னுயிரைத்தான்தின்றான்.

He consumed his own life.

1022. தலைமேலேயடித்தாலுஞ் சற்றுங்குனியாய்.

Though hit on the head thou dost not stoop.

1023. தலைசொறியக்கொள்ளி தானே தேடிக்கொண்டாய்.

Thou hast procured a fire-brand to scratch thy head.

1024. தலைவலிக்குத் தலையணையை மாற்றிப்போட்டாற் போமோ?

Will the head-ache be cured by changing the pillow?

1025. தம்பியுடையவன் படைக்கஞ்சான்.

He who has a brother will not quail before a host.

1026. தலைநட்டுச் சமுத்திரமேலோடலாமா?

Can one walk through the sea on his head?

1027. தன்னையறியாச்சன்னதமுண்டா?

Though a demoniac he knows himself.

1028. தருமத்தைப்பாவம் வெல்லாது.

Sin will not conquer virtue.

1029. தனக்கு மூக்குப்போனாலுமெதிரிக்குச் சகுனப்பிழைவேண்டும்.

Though one lose his own nose, he is determined to present his adversary with a bad omen.

1030. தன்னூரிற்பேச்சுப்பிறவூருக்கேச்சு.

The dialect of one country is barbarous in the estimation of another.

1031. தண்ணீரிலே விளைந்த உப்புத் தண்ணீரிலே கரைய வேண்டும்.

The salt that has been produced by water dissolves in water.

1032. தனக்கென்றாற் புழுக்கைகலங்கழுவியுண்ணாது.

If for himself, the servant will not wash his dish as a preparation for eating.

1033. தண்ணீரிலமுங்கின முட்டை உப்புப்போடக்கிளம்பும்.

The egg that is immersed in water will rise, if salt be added.

1034. தலையோடேபோகிறது தலைப்பாவோடேபோனது.

That which was intended for the head befell the turban.

1035. தங்கந்தரையிலே ஒருகாசு நாரத்தங்காயுறியிலே.

Whilst the gold is on the ground, the wild orange worth but a cash is on a swinging tray.

1036. தகப்பன்பட்டம்பிள்ளைக்கல்லவா!

Does not the child share the honours of its father?

1037. தன்னாலேதான்கெட்டாலண்ணாவியென்ன செய்வான்!

If one perish by his own act, what can the teacher do?

1038. தம்பிசமர்த்தன் உப்பில்லாக்கஞ்சிகலங்குடிப்பான்.

The fellow is clever: he can drink a gallon of canjy without salt.

1039. தலைவலியுங்காய்ச்சலுந்தனக்குவந்தாற்றெரியும்.

When he shall have the head-ache and fever himself, he will know what they are.

1040. தடவிப்பிடிக்கமயிரில்லை, அவன்பேர் சவுரியப்பெருமாள்.

Having no hair by which to be seized, he is called a hero.

1041. தன்னூர்ச்சுடுகாட்டுக்குமயலூராற்றுக்குமஞ்சவேண்டும்.

One ought to fear the burning place in his own, and rivers in a foreign country.

1042. தனக்காகாதபானை உடைந்தாலென்ன தகர்ந்தாலென்ன?

What matters it how a useless vessel be broken?

1043. தவிட்டுக்கு வந்த கை தனத்துக்கும் வரும்.

The hand that purloined the bran, will be stretched out for gold.

1044. தலையிடித்தாற்றாழக்குனிவான்.

If his head ache, he will bow down.

1045. தண்ணீருமூன்றுபிழைபொறுக்கும்.

Even water will afford three opportunities for escape.

1046. தலைக்கேறினாற்றனக்குத்தெரியும்.

If it ascend to the head himself will know it.

1047. தயிர்ப்பானையையுடைத்துக் காகத்துக்கமுதிட்டாற்போல.

Like breaking the bowl of curds and giving it to the crows.

1048. தாய்தூற்றினூரார் தூற்றுவர், கொண்டவன்தூற்றினாற் கண்டவன்தூற்றுவான்.

If the mother vilify, the whole country will do so; if the husband vilify, all will so treat his wife when they see her.

1049. தாய்முகங்காணாத பிள்ளைபோல
Like a child who sees not its mother's face.

1050. தாயும்பிள்ளையுமானாலும் வாயும்வயிறும்வேறு.
Though they are mother and child, the mouth and belly are different.

1051. தாயைப்போற்பிள்ளை நூலைப்போற் சீலை.
The child is like its mother and the cloth is like the yarn.

1052. தாயைப்பழித்துமகள் அபசாரியாடுகிறது.
The daughter abuses her mother while she herself is committing whoredom.

1053. தாடிக்குப்பூச்சுற்றலாமா?
Shall the beard be adorned with flowers?

1054. தான்போய்மோரில்லையென்று தயிருக்குச் சீட்டெழுதினானாம்.
It is said that having gone himself without obtaining butter milk, he wrote for curds.

1055. தாய்க்குதவிளைந்தாலுந் தனக்குதவிளையவேண்டும்.
A supply must be yielded for himself as well as his mother.

1056. தான்போக வழியைக்காணுமல் மூஞ்சூறுவிளக்குமாற்றையுங் கவ்விக்கொண்டுபோனதாம்.

The musk rat not having a way for itself carried away the broom.

1057. தாய்வார்த்தைகேளாதபிள்ளை நாய்வாயிற் சீலை.

A child not obedient to its mother is like cloth in a dog's mouth.

1058. தாமரையிலைத்தண்ணீர் போல.

As water on the lotus leaf.

1059. தாபரமில்லாவிளங்கொடிபோல,

As a tendril without support.

1060. தான்சாகமருந்துண்பாரில்லை.

There are none who take medicine in order that he may die.

1061. தானறியாச் சிங்களந்தன்பிடரிக்குச் சேதம்.

The Cingalese through ignorance brought punishment to his own back.

1062. தாயில்லாப்பிள்ளையைத் தலையிலே தட்டலாமா?

Is it fit to beat on the head the motherless child?

1063. தாய்கையிற் பொன்னிலுந் தன்கையிற்றவிடு நன்று.

The bran in his own, is better than gold in his mother's hand.

1064. தாய்முலைப்பாலுக்குப்புப்பார்த்தாற் போல.

As the child tastes its mother's milk to see if it is salt.

1065. தான்கள்வன் பிறரை நம்பான்.

Himself a thief he trusts not others.

1066. தாய்க்குப்பிறகு தாரம்.

Next to the mother is the wife.

1067. தான்றிக்காயிற் சனியன் புகுந்ததுபோல.

As the Saturn entered into the Tandy fruit.

1068. தான்சம்பாதித்தாற்றனக்குதவும் ஊர்சம்பாதித்தாலுதவமாட்டாது.

If acquired by himself it will be of value, but if by the community it will not avail him.

1069. தாய்க்குச்சோறிடுகிறதூருக்குப்புகழ்ச்சியா?

Is the fame of supporting a mother to be spread through the country?

1070. தான்தேடாப்பொன்னுக்குமாற்றுரையில்லை.

He is not careful to test gold not acquired by his own effort.

1071. தாய்தவிட்டுக்கழுகையில் பிள்ளையிஞ்சிப் பச்சடி கேட்கின்றது.

Whilst the mother cries for bran, the child asks for chitny.

1072. தானாய்க்கனியாதகனி தடிகொண்டடித்தாற்கனியுமா!

Will the fruit ripen by being beaten with a stick that does not ripen spontaneously?

1073. தாயேழடிப்பாய்ந்தால்மகளெட்டடிப்பாய்வாள்.

If the mother leap seven feet, the daughter will leap eight.

1074. தாயொருபாக்குத்தான கமுகந்தோப்பு.

The mother is a mere aricanut, but the daughter is a grove of aricanut trees.

1075. தாதனும்பறையனும்போல.

Like Tathan and the Parian.

1076. தானாகவந்தசீதேவியைக் காலாலுதைத்துத்தள்ளலாமா!

Is it fit to kick the goddess of prosperity that came of her own accord?

1077. தானொன்றைநினைக்கத் தெய்வமொன்றை நினைத்தது.

Whilst we meditate one thing, God determines another.

1078. தான்செத்துலகங்கவிழ்ந்தாலென்னநிமிர்ந்தாலென்ன.

What matters it after his death whether the world is erect or turned upside down.

1079. தாயைப்பார்த்து மகளைக்கொள்.

Marry the daughter on knowing the mother.

1080. தாம்புமறுதல் தோண்டியுமோட்டை.

It is a rope, but rotten; it is a bowl, but cracked.

1081. தானுமுண்ணான் பிறருக்குங்கொடான்.

He will not eat himself, nor give to others.

1082. தாய்க்குமூத்துத் தகப்பனுக்குவிளக்குப்பிடிக்கிறது.

Senior to his mother, and holding the lamp for his father.

1083. தாய்தனக்காகாதமகளார்தனக்கு நல்லவள்?

Who will esteem the daughter that is not regarded by her mother?

1084. தாட்டோட்டக்காரனுக்குத் தயிருஞ்சோறும், விசுவாசக்காரனுக்கு வெந்நீருஞ்சோறும்.

Curds and rice for the disorderly, and warm water and rice for the virtuous.

1085. தான்றின்னத்தவிடில்லை, வாரத்திற்கு வளர்க்கப் பன்றிக்குட்டி.

He has no bran to eat himself and yet feeds young pigs for hire.

1086. தான்ப த்தினியானால் தேவடியாள்தெருவிலுங் குடியிருக்கலாம்.

If one be chaste she may dwell even in a street of harlots.

1087. தான்றின்னிபிள்ளைவளர்க்காள் தவிடுதின்னிகோழிவளர்க்காள்.

The woman who eats voraciously will not rear children, nor will she who eats bran rear fowls.

1088. திரளெலி வளையெடாது.

A multitudes of rats will not make holes.

1089. திறந்தவீட்டிலே நாய்நுழைந்தாற்போல.

As the dog entered the open house.

1090. தின்றமண்ணுக்குத்தக்க சோகை.

The jaundice will be in proportion to the sand eaten.

1091. தினைவிதைத்தவன் தினையறுப்பான், வினைவிதைத்தவன் வினையறுப்பான்.

He who sows small grain reaps the same; and he who sows actions reaps the effects.

1092. திக்கற்றவனுக்குத் தெய்வந்துணை.

God is the help of the helpless.

1093. திருடனுக்குத் தெய்வமேசாட்சி.

God is a witness against the thief.

1094. தினவுக்குச் சொறிதலிதம்.

Scratching is agreeable when one itches.

1095. திருவன்கண்ட பச்சையாய்ப்போயிற்று.

It is gone as the emerald found by the jester.

1096. தின்றநஞ்சுகொல்லுந்தின்னாதநஞ்சுகொல்லுமா!

Poison swallowed will kill; will that which is not eaten kill?

1097. திருவிளக்கிட்டாரைத் தெய்வமறியும்; நெய்வார்த்துண்டாரை நெஞ்சறியும்.

God knows those who dedicate to him the sacred lamp, and the mind knows those who eat food prepared with ghee.

1098. திங்களுஞ் சனியுந்தெற்கே நோக்கவேண்டும்.

On monday and saturday look south.

1099. தின்கத்தெரியாமற்றின்பானேன்?

Why do you eat, if you do not know how?

1100. திருட்டு நாயிக்குச் சலங்கை கட்டினாற் போல.

As a bell was tied to the thieving dog.

1101. திண்ணைக்குவிடிந்தால்வீட்டுக்குவிடியும்.

If day have dawned on the portico, it has dawned on the house.

1102. திருடிக்குத்தெய்வமில்லை அபசாரிக்காணையில்லை.

The thief regards not God, nor does a harlot an oath.

1103. திருட்டுப்பூனைக்குப்போடுதேங்காய்ப்பாலுஞ்சோறும்

Place cocoanut milk and rice for a thieving cat.

1104. தீவினைசெய்யிற் பேய்வினைசெய்யும்.
Devils will injure those who are vicious.

1105. தீட்டின மரத்திலேயோ கதுமைபார்க்கிறது.
Is the keenness of the knife to be tested on the knife board?

1106. தீராக்கோபம்பாடாய் முடியும்.
Raging anger ends in ruin.

1107. தீராவழக்கிற்குத் தெய்வந்துணை.
God is the arbitrator of inscrutable cases.

1108. தீரர்நெஞ்சுக்குத் தெய்வந்துணை.
God is the help of the distressed mind.

1109. தீக்குக்காற்றுதவியானது போல.
As the wind aided the fire.

1110. துணைப்போனாலும் பிணைப்போகாதே.
Though you lend your aid, do not become a surety.

1111. துள்ளுமான் துள்ளித்துரவில்விழுந்தது.
The bounding deer leaped into the pit.

1112. துறவிக்கு வேந்தன்துரும்பு.

The devotee estimates royalty as a rush.

1113. துள்ளினமாடு பொதிசுமக்கும்.

The restiff ox will carry its burden.

1114. துள்ளாதேதுள்ளாதே ஆட்டுக்குட்டி என்கையிலி ருக்கிறது பிச்சாக்கத்தி.

Leap not, leap not, O lamb! the knife is in my hand.

1115. துழாவிக்காய்ச்சாதது கஞ்சியுமல்ல வினவிக்கட் டாதது கலியாணமுமல்ல.

The unstirred canjy is not good, nor is a marriage without due counsel.

1116. துரும்புதூணானாற் றூணென்னவாகவேண்டும்?

If a rush be a pillar, what must the pillar be?

1117. துருக்கதெருவிலே திருவெம்பாவையா?

May the feast of Tirruvempavi be celebrated in the musselmans' street?

1118. துரும்பைத் தூணாக்குகிறதா?

Is a rush to be made into a pillar?

1119. துணிந்தார்க்குத் துக்கமுண்டா?
Do the daring grieve?

1120. துடைத்தவிடத்திற்றசை யெடுத்துப் போடுவேன்.
I will remove the flesh from the place that has been cleaned.

1121. துட்டப்பிள்ளைக் கூரார் புத்திசொல்லுகிறது.
The vicious child is corrected by any one.

1122. துணிந்தானுக்குத் துக்கமில்லை; அழுதவனுக்ககங் காரமில்லை.
The daring have no grief, nor have the sorrowful pride.

1123. துரோபதியைத் துகிலுரிந்ததுபோல.
As Tropathy was deprived of her cloth.

1124. துர்ச்சனனைக்கண்டாற்றூரநில்.
Stand aloof from the vicious.

1125. தூரத்திற்றண்ணீராவத்துக் குதவாது.
The distant water avails nothing in extremities.

1126. தூண்டிற்காரனுக்குக் கண்ணெங்கே மிதப்பிலல்லவோ?

Upon what is the eye of the angler fixed? is it not upon his raft?

1127. தூரப்போகவேணுமோ கீரைப்பாத்தியிற் கைவைக்க.

Is it necessary to go to a great distance to put the hand into the bed of herbs?

1128. தூக்குண்டானல் நோக்குண்டு.

When a present is borne, a favourable look will be obtained.

1129. தூங்கினவன் கன்று கடாக்கன்று.

The calf of the sleeper was a male.

1130. தூக்கணங்குருவி குரங்குக்குப் புத்திசொன்னாற் போல.

As the penduline bird gave advice to the monkey.

1131. தெய்வம்விடைகொடுத்தாலும் பூசாரிவிடைகொடான்.

Though the god responds, the priest responds not.

1132. தென்றல்முற்றிப் பெருங்காற்றாயிற்று.

The soft south wind became a great wind.

1133. தென்னமரத்திலே தேள்கொட்டப் பனைமரத்திலே நெறிகட்டினதுபோல்.

As the scorpion stung the cocoanut tree and the palmira swelled in consequence.

1134. தெற்கேயடித்த காற்றுத் திரும்பியடியாதோ?

The south wind that blew, will it not change and blow again?

1135. தேங்காய் தின்றவன் தின்னக் கோம்பை சூப்பினவன் தெண்டமிறுக்கிறதோ?

Whilst he who ate the pulp of the cocoanut goes free, shall he who sucked the rind be fined?

1136. தேன்தொட்டார் கைநக்காரோ?

Will they not suck the hand who have touched honey?

1137. தேள்நெருப்பில் விழுந்தால் எடுத்து விட்டவனைக் கொட்டும்.

A scorpion that falls into the fire, will sting even the man that helps it out.

1138. தேய்ந்தாலுஞ் சந்தனக்கட்டை மணம்போகாது.

Friction removes not the scent of the sandal wood.

1139. தேடுவாரற்றபிணந் தெருவோடே தெருவோடே.
The corpse that has no one to bury it is in the street.

1140. தேடியபூடு காலிலே தடக்கினது.
The herb that is sought entangled the foot.

1141. தேன்வார்த்து வளர்த்தாலுங் காஞ்சிரந் தெங்காகுமோ?
Though the Kanchurie be watered with honey, will it become a cocoa tree?

1142. தேனுந் தினைமாவுந் தேவருக்கற்பிதம்.
Honey and the flour of small grain are offered to the gods.

1143. தேடித்தின்றவர் தெய்வத்தோடொத்தவர்.
Those who eat what they have earned are like gods.

1144. தேசங்கடோறும் பாஷைகள்வேறு.
Languages differ in different countries.

1145. தேனொழுகப் பேசுவான்.
He will so speak that honey may distil.

1146. தேனைத்தொட்டியோ நீரைத்தொட்டியோ?
Have you touched honey or water?

1147. தேவடியாள் சிங்காரிக்கமுன்னே தேரோடி நிலையில் நின்றது.
Before the woman of the idol had adorned herself, the car had finished its round.

1148. தேவடியாள்வீட்டிற்றிவசங் கொடுத்தது போல,
As votive offerings were given in the house of the prostitute.

1149. தேனுண்டானீதேடிவரும்
If there is honey, the flies will discover it.

1150. தைத்தவாயிலுமிருக்கத் தாணித்தவாயிலுமிருக்க வெங்காலேபோனீருப்பனே.
O salt! how didst thou go? the mouth of the bag through which thou wast put, is closed, and the rent sowed, is firm.

1151. தொட்டிலிற்பேய் சுடுகாடுமட்டும்.
The demon that attends the child in the cradle follows it to the funeral pile; i. e. bad habits acquired in youth are inveterate,

---

1152. தொட்டுக்காட்டாதவித்தை சொட்டுப்போட்டாலும் வாராது.

An art not taught by practical instruction will not come even by blows.

1153. தொட்டிலிற் பிள்ளைக்கு நடக்கிறபிள்ளை நமன்.

The child that can walk is as death to the infant in the crib.

1154. தொண்ணூறுகடனோடே துவரம்பருப்புக் காற்பணம்.

With ninety debts, one of a quarter of a fanam for a pea.

1155. தோணிபோகத் துறைகிடக்கும்.

The ship recedes and the shore is stationary.

1156. தோளிலிருந்து செவியைக்கடிப்பான்.

Sitting on the shoulder, he will bite the ear.

1157. தோலிருக்கச் சுளைவிழுங்கி.

He will swallow the jackfruit with its rind.

1158. தோட்டநிலைத்தல்லவோ தென்னம்பிள்ளைவைக்க வேண்டும்.

After securing possession of the garden, he must plant cocoanut trees, must he not?

1159. நரியூரைவிட்டுப் புலியூருக்குப்போனேன் புலியூருந் நரியூராயிற்று.

I left the resort of foxes and went to that of the tiger; and the resort of the tiger became that of foxes.

1160. நஞ்சு நாற்கலம் வேண்டுமோ?

Is four quarts of poison necessary?

1161. நனைந்தகிழவிஅடுப்படிக்கு வந்தால் இருந்தவிறகிற்குச் சேதம்.

If a wet old woman come into the kitchen, the fire wood will be injured.

1162. நக்குகிற பொழுது நாவெழும்புமா?

When licking, will the tongue rise?

1163. நன்மாட்டிற்கோர்சூடு, நற்பெண்டாட்டிக்கோர் வார்த்தை.

Once branding is enough for the good cow, and one word of admonition is sufficient for a good wife.

1164. நம்பினவரை நடுவாற்றிற் கைவிடலாமா?

Is it right to abandon in the midst of the river those who have confided in us?

1165. நகரைக்குப் பேத்தை வழிகாட்டுகிறதோ!
Can the frog direct the way of the nagaray fish?

1166. நரிவால்கொண்டு கிணறாழம்பார்க்கலாமா?
Can the depth of the well be ascertained with a fox's tail?

1167. நட்டுவன் பிள்ளைக்குக்கொட்டிக்காட்டவேண்டுமா?
Is it necessary to teach the son of a tom-tom beater to drum.

1168. நன்றாயிருந்ததாம் நல்லிசுட்டபணிகாரம்.
It is said that the confectionary of Nalli was good.

1169. நம்பவைத்துக்கழுத்தறுக்கலாமா?
Is it right to cut the throat of those whose confidence we have gained?

1170. நரிகொழுத்தென்ன காஞ்சிரம்பழுத்தென்ன?
What advantageth the fatted fox or the ripened kanchurie?

1171. நடுவூருணச்சுமரம் பழுத்தற்று.
As a poisonous tree yielded ripe fruit in the midst of the country.

1172. நரியொருசாலுக்குழப்போனது.

The fox went to plough one drill.

1173. நல்லது நாற்கலம் ஊத்தைபதின் கலம்.

Of good things four quarts, and of filth ten.

1174. நக்குண்டார்நாவேழார்.

Favours silence the tongue.

1175. நடக்கவழியறியாதவனுக்கு நடுவீடு காதவழி.

The middle of the house is ten miles distant to him who cannot walk.

1176. நரிக்குட்டிக் கூளைபழக்க வேண்டுமோ!

Is it necessary to teach the young fox to howl?

1177. நமனெடுத்துக்கொண்டு போதும் பொழுது நழுவி விழுந்தசீவன்.

Life that escaped when death was carrying it off.

1178. நல்லவனொருவனடுவேநின்றாலறாத வழக்குமறும்.

When an honest man mediates in a difficult suit, it will soon be settled.

1179. நரி நாலுகாற்றிருடன், இடையனிரண்டுகோற்றிருடன்.
The fox is a four-footed thief, and the shepherd is two-footed.

1180. நல்லிணக்கமல்லதல்லற்படும்.
Sorrow attends disunion.

1181. நண்டுகொழுத்தால் வளையிலிராது.
When the crab becomes fat, it will not stay in its hole.

1182. நமதுதலைமயிர் அவன் கையிலகப்பட்டுக்கொண்டது.
The hair of my head is caught in his hand.

1183. நந்தவனத்தாண்டிக்கும் முயல் வேட்டைக்குமெத்தனைதூரம்.
How great the distance between the mendicant of the flower garden and hunting hares.

1184. நரியின்கையிலே குடல் கழுவக்கொடுக்கிறது.
To give the entrails to the fox to be washed.

1185. நரிகூப்பிட்டுக்கடல் முட்டுமோ?
Will the sea rise at the call of the fox?

1186. நடந்த பிள்ளை தவழுதாம் தாயார் செய்ததவத்தாலே.

By reason of the mother's penance the child that walked creeps.

1187. நல்லவிளங்கன்றே துள்ளாதே.

Do not skip, thou good young calf.

1188. நண்டைச்சுட்டு நரியைக்காவல்வைக்கிறது.

To roast a crab and set a fox to guard it.

1189. நட்டத்துக்கொருவன் நயத்துக்கொருவன்.

One loses and another gains.

1190. நச்சு பிழிந்த சீலை.

A wrung out poison cloth.

1191. நரித்துப் பெரியதனங்கொடுத்தாற் கிடைக்கிரண்டாடுகேட்கும்.

If a fox be encouraged, it will demand two sheep from each flock.

1192. நடாற்றிலே கைவிடுகிறது.

To abandon one in the midst of the river.

1193. நச்சுமரமானாலும் நட்டவர்கள்வெட்டார்கள்.

Though the tree be poisonous they who planted it will not cut it down.

1194. நகத்தாலே கிள்ளுவதைக் கோடரிகொண்டு வெட்டுகிறதோ?

Is it to cut with a hatchet, what can be removed by the nail?

1195. நடுஉழவிலே நந்தையறுந்தது.

The rope connecting the yoke with the plough broke in the midst of the furrows.

1196. நன்மரத்திற் புல்லுருவி.

A parasite on a good tree.

1197. நஞ்சுக்குள்ளிருந்தாலுநாகமணி, குப்பைக்குள்ளிருந்தாலுங் குன்றுமணி.

Though in poison it is a ruby, and although in the dunghill it is a berry.

1198. நல்லவரை நாவிலுரை பொன்னைக் கல்லிலுரை.

The good are tested by the tongue, and gold by a touchstone.

1199. நன்மையுந் தின்மையுமிம்மையிலே தெரியும்.

Good and evil are known in this life.

1200. நல்லவனென்றுபெயரெடுக்க நாட்செல்லும்.

It requires time to obtain a good name.

1201. நல்லவுயிர் நாற்பதுநாளிருக்கும்.

A good spirit will remain forty days.

1202. நல்லாரைநாவழியப்பேசினுற் பல்லாலே பதக்குப் புழுச்சொரியும்.

From the mouth of those who calumniate the good a gallon of worms shall proceed.

1203. நரிமுன்னே நண்டுகரணம்போட்டதுபோல.

As the crab made a summerset before the fox.

1204. நல்லோருக்குப்பெய்யுமழை எல்லாருக்கும்.

The rain that descends on account of the good benefits all.

1205. நல்லபாம்பாடுதல்கண்டு நாக்குப்பூச்சியாடியது போல.

As the earth-worm imitated the graceful contortions of the cobra.

1206. நனைந்து சுமக்கலாமா?

Being wet can one bear a burden?

1207. நாடொன்றிவாழிற் கேடொன்றுமில்லை.

If a community be united no evil will happen to it.

1208. நாலுபிள்ளைப்பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு.

Rice may be had in the middle of the street by one who has borne four children.

1209. நானொன்றையெண்ண விதியொன்றையெண்ணிற்று.

The decisions of fate are wide of my expectations.

1210. நாய்வாலுக்கு மட்டை வைத்துக்கட்டினால் நிமிருமா?

Will the dog's tail become strait although bound in splinters of wood?

1211. நாச்சியாரைக்காணாதவிடத்திலே முறுமுறுப்பது போல.

Like murmuring in the absence of the mistress.

1212. நாழிப்பணங்கொடுத்தாலும் மூழிப்பட்டம்போகாது.

Though a quart of money be given, cropped ears cannot be restored.

1213. நாய்வாழ்ந்தென்ன பூனைகைம்பெண்ணிருந்தென்ன!

What is the connubial felicity of the dog, or the widowhood of the cat?

1214. நாலுபேர்கூடினதேராசசபை.

The union of four constitutes a royal assembly.

1215. நாறுமீனைப் பூனைபார்ப்பது போல.

As the cat looking at the stinking fish.

1216. நாவிதன் குப்பையைக்கிண்டினால் மயிர் மயிராயிருக்கும்.

If the rubbish heap of the barber be examined, hair will be found.

1217. நாய்க்கேன் தோல்த்தேங்காய் நடுவீட்டுக்குட்போட்டுருட்டவோ!

Why give an unhusked cocoanut to a dog? Is it that he may roll it about the house?

1218. நாயைக்குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தால் வாலைக்குழைத்துப் பீதின்னப்போம்.

If a dog be washed and placed in the middle of the house, it will wag its tail and presently eat ordure.

1219. நாய்கோண்டுபோன பானையை யார்கோண்டு போனாலென்ன?

What matters it who takes the vessel that was carried off by the dog.

1220. நாழியரிசிசோறுண்டவன் நமனுக்குயிர்கோடுக் கான்.

He who can eat a measure of rice will not give his life to the angel of death.

1221. நாய்க்குத்தெரியுமோதோல்த்தேங்காய்?

Does the dog know the quality of the unhusk ed cocoanut?

1222. நாய்க்குப்பருத்திக்கடையிலலுவலென்ன?

What does the dog in the cotton market?

1223. நாச்சியாருமொன்றைப் பற்றி வார்க்கிறாள் நானு மொன்றைப்பற்றிக் குடிக்கிறேன்.

My mistress pours with one purpose, but drink it for another.

1224. நாய் கோயிலுக்குப்போவானேன் கோயில்காத் தவன் தெண்டமிறுப்பானேன்?

Why should a dog go to the temple? why fine the porter of the temple?

1225. நாய்வாலிலே தேன்வைத்தாலாருக்குக் கூடும்.

What avails the honey gathered on the dog's tail?

1226. நாய்க்குழந்தாற்றாய்க்கு மணாளன்.
When a pup is grown it becomes the consort of its dam.

1227. நாயையடிப்பானேன் பல்லிழிவு பார்ப்பானேன்!
Why beat the dog to see him grin?

1228. நாட்டாள் பெற்றகுட்டி நாகரிகம் பேசவல்லகுட்டி.
The child of the rustic is as eloquent as a citizen.

1229. நாயுஞ்சரி நாவியுஞ்சரியுனக்கு.
With you a dog and a civet cat are the same thing.

1230. நாய் சமுத்திரத்திலேபோனாலுநக்குந்தண்ணீர்.
Though in the midst of an ocean the dog can only lap.

1231. நாட்டுக்கோருமழை நமக்கிரண்டு மழை.
The country has obtained one fall of rain, I two.

1232. நாயுந் தன்னிலத்துக்குமிடுக்கு.
A dog is courageous in his own kennel.

1233. நாய்பட்டபாடு தடிக்கப்பறியும்.
The stick knows the sufferings of the dog it beat.

1234. நாய்க்கு நறுநெய் இணங்காது.

Good ghee does not agree with a dog.

1235. நாய்க்குக்கடிவாளம் பூட்டினாற்போல.

Like putting a bit in a dog's mouth.

1236. நாய் சந்தைக்குப் போனது போல.

As the dog went to the market.

1237. நாயையேவ நாய்வாலையேவுகிறது.

The dog receives commands and gives them to his tail.

1238. நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்.

The hare that I have caught has three legs.

1239. நாவுக்கிசைந்தது பாவுக்கிசையும்.

That which is agreeable to the tongue is prosodial.

1240. நானுநரைத்து நரைமண்டையனானேன் காடுநரைக்கக் கண்டது புதினம்.

I have become greyheaded; to see the jungle grey is wonderful.

1241. நாயறியாது ஒரு சந்திப்பானையின் நியாயத்தை.

The dog is ignorant of the speciality attached to the cooking vessels of a fast day.

1242. நாழிநெல்லுக்கொருபுடைவை விற்றாலுந் நாயின் குண்டிநிருவாணம்.

Though a cloth may be had for a measure of rice, the posteriors of the dog will be bare.

1243. நாயையடிப்பானேன் பீயைச் சுமப்பானேன்?

Why beat the dog and carry away his dung?

1244. நாய் சிங்கத்துக்குப்பட்டங்கட்டுமோ?

Can a dog invest a lion with authority?

1245. நாடுகாடாச்சே.

The country has become a desert.

1246. நாய்வாலுக்கெண்ணெயிட்டு நிமிர்த்தினால் நிமிருமோ?

Though a dog's tail be straightened by the application of oil will it remain so?

1247. நாய்க்கு வேலையுமில்லை நடக்கநேரமுமில்லை.

The dog has no employment, and no time to rove about.

1248. நாயேன்சொல் அம்பலத்துக்கேறுமோ?

Will the word of the low dog ascend into the select assembly?

1249. நாங்களுங் கங்கணங்கட்டினதுண்டு கழுத்துக்குக் கங்கணங்கட்டினதில்லை.

We have worn bracelets, but have seen none wear them on the neck.

1250. நாமொருவருக்குக் கொடுத்தால் நமக்கொருவர் கொடுப்பார்.

If we give to others, they will give to us.

1251. நாற்பது சென்றால் நாய்க்குச்சரி.

Like a dog, having attained forty.

1252. நானுமறியேன் அவளும்பொய்சொல்லாள்.

I do not know; she also will not utter a lie.

1253. நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் வேண்டாம்.

A sacred string is unnecessary to the brahmin who is generally known.

1254. நாயின் பீயைமிதிப்பானேன் நல்லதண்ணீர் வார்த்துக்கழுவுவானேன்?

Why tread on dog's dung? Why wash in clear water?

1255. நாரற்றுக் கூடும் நரம்பற்றுக் கூடுமோ?

A broken fibre may be joined, a broken sinew cannot.

1256. நாய்க்குத்தெரியுமா கொக்குப்பிடிக்க?
Can a dog catch a heron?

1257. நாயைக்கொஞ்சினால் வாயைநக்கும்.
If you kiss a dog he will lick your mouth.

1258. நிலங்கடக்கப் பாயலாமா?
Can we leap so as to clear the earth?

1259. நித்தப்போனால் முற்றஞ்சலிக்கும்.
By frequenting another's house the yard will grow weary.

1260. நித்தஞ்சாவார்க் கழுவாருண்டோ?
Are there those who will weep at death when it occurs daily.

1261. நிழலருமை வெயிலிலேதெரியும்.
The luxury of a shade is best estimated in the sunshine.

1262. நின்றவெள்ளத்தையும் வந்தவெள்ளங்கொண்டு போயிற்று.
The recent flood has carried away the former.

1263. நித்திரை சத்துரு.
Sleep is an enemy.

1264. நிழலழகு முசிறுபொல்லாது.

The shade is beautiful, but the red ants are troublesome.

1265. நிலத்திலெழுந்தபூண்டு நிலத்தில்மடியவேண்டும்.

A plant must perish on the ground from which it sprung.

1266. நிலையைவிட்டால் நீச்சலல்லவோ?

Is it not necessary to swim when beyond one's depth?

1267. நிலவுக்கொளித்துப் பரதேசம்போகலாமோ?

Can we hide ourselves from the moonshine by one's residence.

1268. நின்றமரம்போனால் நிற்கிறமரநெடுமரம்.

The former tree being removed, the existing one is tall.

1269. நிசமொன்று பலதீங்குநீக்கும்.

Certainty in one thing removes many evils.

1270. நிறைபொலியிலே கழுதை வாய்வைத்தாற்போல.

As the ass put its mouth on the heap of corn.

1271. நின்றற்போல்விழுந்தாற்றலையுடையும்.
If one falls as he stands his head will be broken.

1272. நித்திரை சுகமறியாது.
Sleep is unconscious of enjoyment.

1273. நீருயர நெல்லுயரும்.
The higher the water, the higher the rice plant.

1274. நீறுங்கொல்லும் நெருப்புங்கொல்லும்.
Chunambu will kill, and so will fire.

1275. நீயடித்துப்போடு நான்கடித்துப்போடுகிறேன்.
You beat, and I will bite.

1276. நீந்தவறியாதவனை வெள்ளங்கொண்டுபோம்.
The tide will carry off him who cannot swim.

1277. நீரென்றுசொல்ல நெருப்பாய்முடிந்தது.
That which was said to be water, has turned out to be fire.

1278. நீரிற்குமிழி சரீரம்.
The body is like a water bubble.

1279. நீர்போனால் மீன்துள்ளுமா?
If the water be dried up, will the fish leap?

1280. நீராழங்காணலாம், நெஞ்சாழங் காணப்படாது.
The depth of water may be ascertained, but the depth of the heart cannot.

1281. நீ நீராலேவிலகினாய், நான் நெருப்பாலே விலகினேன்.
You escaped by water, and I escaped by fire

1282. நீலத்துக்குக் கறுப்பூட்டவேண்டுமா?
Is black to be added to blue?

1283. நுனிக்கொம்பிலேறி அடிக்கொம்புவெட்டுவார்களா?
Having ascended its upper branches, will they cut down the trunk of the tree?

1284. நுளையன்பேச்சம்பலத்துக்கேறாது.
The talk of fishermen will not be noticed in the select assembly.

1285. நூலில்லாமல் மாலைதொடுக்கிறது.
To make a garland without a string.

1286. நெருப்பைத் தலைகீழாய்ப்பிடித்தாலும் அதின் சுவாலைகீழாகுமா?

Though a fire-brand be inverted, will the flame burn downwards?

1287. நெய்க்குடத்தி லெறும்பு மொய்த்ததுபோல.

As ants swarmed around the ghee pot.

1288. நெரிஞ்சிமுள்ளுத்தைத்தாலும் இருந்துபிடுங்கவேண்டும்.

Though the thorn in the foot be very small, yet stay and extract it.

1289. நெய்கிறவனுக்கேன் குரங்குக்குட்டி.

What has the weaver to do with a young monkey?

1290. நெருப்பிலும் பொல்லாச்செருப்பு.

Slippers worse than fire.

1291. நெருப்பிலே புழுப்பற்றுமா?

Can insects breed in the fire?

1292. நெடியாரைக்குறியாரை ஆற்றிலேதெரியும்.

The long and the short are ascertained in the river.

1293. நெருப்பில்லாமற் புகைப்புகையுமா?
Will there be smoke, when there is no fire.

1294. நெருப்பென்றால் வாய்வேகுமா?
By enunciating the word fire, will the mouth be burnt?

1295. நெய்க்குடமுடைந்தது நாய்க்குவேட்டை.
The breaking of the ghee pot is a feast, for the dog.

1296. நெருப்பைச்சிறிதென்று முந்தானையில் முடியலாமா?
May fire be tied in the border of the garment because it is little?

1297. நெருப்பைக் கண்டுமிதித்தாலுஞ் சுடும், காணாமல் மிதித்தாலுஞ் சுடும்.
Whether the fire be perceived or not, it will burn when trodden on.

1298. நெல்லுவகை எண்ணினாலும் பள்ளுவகை எண்ணக்கூடாது.
Though the different kinds of paddy may be ascertained, the varieties of the Pallu cast, cannot.

1299. நெருப்பிலீமொய்க்குமா?
Will flies swarm in the fire?

1300. நேற்றுவந்தமொட்டைச்சியார் நெய்வார்த்துண்ணச் சிணுங்குகிறளாம்

The old bald-headed woman who came yesterday whines that she may eat rice with ghee.

1301. நேற்றுவந்தானுங்குடி அவன்றலையிலேவிழுந்ததாமிடி.

It is said that he entered his residence yesterday, and that a thunder-bolt fell on his head.

1302. நொண்டிக்குதிரைக்குச் சறுக்கினதுசாட்டு.

The lame horse says in excuse for his stumbling, that it was a slip.

1303. நோயாளிவிதியாளியானாற் பரிகாரிபேராளி.

If it be the fate of the patient to live long, the physician's fame is promoted.

1304. நோய்கொண்டார் பேய்கொண்டார்.

The sick are like the possessed.

1305. நோகாமலடிக்கிறேன் ஓயாமலழு.

I punish very gently, you may cry without ceasing.

1306. நோயாளிக்கு ஆசைவார்த்தை சொன்னாற்போல.

Like speaking kind words to the sick.

1307. நோவோர்பக்கமிருக்கச் சுடோர்பக்கம போ
டாற்போல.

Branded on one side, whilst the other is in pain.

1308. நோவாளிக்குத்தெரியும் நோவின்வருத்தம்.

The sick knows what pain is.

1309. பகிடிக்குப்பத்துக்காசு திருப்பாட்டுக்கொருகாசு.

Ten cash for the feat of a harlequin, and one for a sacred song.

1310. படித்து முட்டாளாயிருக்கிறன்.

He is a learned fool.

1311. பழுத்தபழங் கொம்பிலிராது.

Ripe fruit will not remain on the branch.

1312. பனைவெட்டினவிடத்திலே கழுதைவட்டம்போட்
டதுபோல.

As an ass perambulated the place where palmira timber had been felled.

1313. பறைச்சி பிள்ளையைப் பள்ளிக்குவைத்தாலும்
பேச்சிலே அய்யேயென்னுமாம்.

It is said that though the son of a Paria woman be put to school, he will exclaim Aiye! in his speech.

1314. பன்றி பலகுட்டி போட்டாற்போல.
As the sow brought forth many young ones.

1315. பனையால்விழுந்தவனைப் பாம்புகடித்தது.
A snake bit him who had fallen from a palmira tree.

1316. பனியைநம்பி ஏர்ப்பூட்டினதுபோல.
Like ploughing in reliance on the dew.

1317. பசுப்போலேயிருந்து புலிப்போலப்பாய்கிறாய்.
Thou appearest like a cow, but thou leapest like a tiger.

1318. பரியத்துக்கஞ்சிக் குருட்டுக்கண்ணியைக்கொண்டதுபோல.
As one married a blind woman to avoid making the ordinary presents to the bride.

1319. பத்துவராகனிறுத்தோமென்றாலுஞ் சந்தேகநிவிர்த்தியாயிற்றே.
Although we have paid a fine of ten pagodas, our doubts are removed.

1320. பஞ்சாங்கம்போனாலும் நட்சத்திரம்போகாது.
Though the astrological calculation may be lost, the star will not.

1321. பலதுள்ளி பெருவெள்ளம்.
Many drops make a great flood.

1322. பத்தியில்லாப்பூனை பரமண்டலத்துக்கேறுமா?
Will the cat that has no piety ascend to heaven?

1323. பசுவிழுந்தது புலிக்குத்தாயம்.
The fall of the cow is advantageous to the tiger.

1324. படைக்குமொருவன் கொடைக்குமொருவன்.
One for the battle field, and another for gifts.

1325. பழையகறுப்பன் கறுப்பனே பழையமண்கிண்ணி மண்கிண்ணியே.
Old Carruppen is Carruppen and the old earthen vessel is an old earthen vessel.

1326. பகையாளிகுடியை உறவாடிக்கெடுக்கவேண்டும்.
In order to destroy an enemy, we must make friendship with him.

1327. பறையதெருவில் வில்வமரமுளைத்ததுபோல.
As the Bel tree sprang up in the Paria street.

1328. பகிடியைப் பாம்புகடித்ததுபோல.
As the snake bit him who made sport with it.

1329. பல்லக்கிலேறயோகமுண்டு உன்னியேறச்சீவனில்லை.
His rank entitles him to a palanquin, but he has not strength to enter it.

1330. பட்டாலறிவன்சண்டாளன் மழைபெய்தாலறிவன்வெள்ளாளன்.
The vicious will understand his faults when punished; and the farmer will know his duty after rain.

1331. பலத்தவனுக்குமருந்துசொன்னாற் பிடுங்கிக்கொடுத்துத்தீரவேணும்.
When a prescription is given to the great, the ingredients must also be sought and it must be prepared for him.

1332. பருத்திக்கடையிலே நாய்க்கலுவலென்ன?
What business has the dog in the cotton-market?

1334. படைமிகுத்தாலரணில்லை.
If the army be numerous, fortifications will avail nothing.

1335. பண்ணப்பண்ணப் பலவிதமாகும்.

By repeatedly doing a thing, it will assume various forms.

1336. பருத்திபுடைவையாய்க் காய்த்தது.

The cotton tree bore cloth.

1337. பசுவைவிற்றுக் கன்றுக்குவழக்கா?

If the cow be sold, shall a dispute ensue about the calf?

1338. பசுத்தோலைப்போர்த்து [illegible] து.

To leap as a tiger, having on a cow's skin.

1339. பஞ்சுபடிந்த பழஞ்சித்திரம்.

An old painting stuffed with cotton.

1340. பழநழுவிப் பாலில்விழுந்ததுபோல.

As the fruit slipped and fell into the milk.

1341. பரிகாரியார் பரிகாரம்பார்த்துப்போகப் பரிகாரியார்பெண்சாதி புழுத்துச்செத்தாளாம்.

It is said that whilst the doctor was on his round distributing medicines, his wife died by being infected with insects.

1342. பட்டினத்துநரியைப் பனங்காட்டுநரியேய்த்ததாம்.

The fox of the palmira grove is said to have deceived the fox of the city.

1343. பசுவை அடித்துச் செருப்பைத்தானங்கொடுக்கிறதா?

Is it to offer shoes to expiate the guilt of killing a cow?

1344. பசிவந்தாற்கறிவேண்டாம் நித்திரைவந்தாற் பாயிவேண்டாம்.

If really hungry, delicacies are not of consequence, nor is a mat to one really sleepy.

1345. பழகப்பழகப் பாலும்புளிக்கும்.

Even milk becomes sour if constantly taken.

1346. பணங்குலமாகும் பசிகறியாகும்.

Affluence is an honourable distinction, and hunger is a good curry.

1347. பணமில்லாதவன் பிணம்.

He who is without money is a corpse.

1348. பஞ்சும்நெருப்பும் ஒன்றாய்க்கிடக்குமோ?

Can cotton and fire be stowed together?

1349. பணம்பந்தியிலே குலங்குப்பையிலே.
The moneyed are had in distinction, whilst high bred are on the dunghill.

1350. பசித்தவன்மேல் நம்பிக்கைவைக்கலாமா?
Can the hungry be depended on?

1351. பன்றியோடிணங்கிய கன்றும்பீதின்னும்.
A calf associated with a pig eats excrement.

1352. பறக்குங்காக்காயிருக்குங்கொம்பறியாததுபோல.
As the crow though it can fly knows not its branch for alighting.

1353. பட்டைக்குத்தக்க பழங்கயிறு.
The old rope suits the basket.

1354. பசித்தார்பொழுதும்போம் பாலுடனே அன்னம் போசித்தார்பொழுதும்போம்.
They who eat rice-milk are borne on by the lapse of time, as those who perish with hunger.

1355. பனிப்பெய்து குளம்நிரம்புமா?
Will the tank be filled by the falling of dew?

1356. பலநாட்களவெடுத்தவன் ஒருநாளகப்படுவான்.
The thief who has robbed others for many days, will be caught in one.

1357. பருமரத்தை அண்டிய பல்லியுஞ்சாகாது.

Even the lizard that abides in a large tree will not die.

1358. பணிகாரமோ சிலுசிலுப்போ.

Do you want the cake, or the frizzling noise occasioned by its being in the pan.

1359. பட்டிக்காட்டுக்குச் சிவப்புத்துப்பட்டி பீதாம்பரம்.

In the desert red cloth is estimated as yellow silk.

1360. பனிப்பெருக்கிலே கப்பலோட்டுகிறாய்.

Thou sailest thy ship in the tide of dew.

1361. பந்திக்குமுந்து படைக்குப்பிந்து.

First at the feast and last in the battle field.

1362. பலதீட்டுக்கொரு முழுக்கு.

One ablution for many defilements.

1363. பன்றிபட்டால் நிந்தங் காட்டானைபட்டாற் பங்கு.

If a hog be obtained, it is his own; if a wild elephant, others are allowed a share.

1364. பட்டணத்தாள்பெற்றகுட்டி பணம்பறிக்கவல்லகுட்டி.

The child of the citizen is clever at purloining money.

1365. பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்கிறது.

To shoot an arrow uselessly that cost a fanam.

1366. பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியும்.

Virtue is apparent in the plants a man has cultivated; or, a man's character is visible in his crops.

1367. பச்சைமரத்திற் கித்தனையென்றாற் பட்டமரத்திற் கெத்தனை?

If so much has happened to the green tree, what may not happen to the dry?

1368. பருத்திப்பொதிக்கோர் நெருப்புப்பொறி.

One spark to a bag of cotton.

1369. பயித்தியம்மாறிப்போச்சுஉலக்கைத் தடிகொண்டுவா கோவணங்கட்ட.

Insanity has left me; bring the rice pounder that I may gird myself.

1370. பணத்தைக்கொடுத்துப் பணிகாரத்தைவாங்கிப் பற்றைக்குள்ளேயிருந்து தின்னவேண்டுமோ?
Having bought the sweetmeats with money, is it necessary to eat them in the bush?

1371. பனையின்கீழிருந்து பால்குடித்தாலுங் கள்ளாம்.
Though you drink milk under a palmira tree, it will be regarded as toddy.

1372. பனையினிழலுநிழலோ பகைவருறவுமுறவோ?
Is the shadow of the palmira, a shade, or is the friendship of the malignant, friendship?

1373. பஞ்சம்போம் பஞ்சத்திற்பட்ட வசைபோகாது.
The famine will end, but not the disgrace contracted during its continuance.

1374. பழம்புண்ணாளி பாதிவைத்தியன்.
He who has an old sore, is half a doctor.

1375. பன்னக்காரன்பெண்டில் பணியக்கிடந்து செத்தாளாம்!
It is said that the wife of the matmaker is stretched dead on the bare ground.

1376. பழத்தேங்காயிலேதானெண்ணெய்.
Oil is produced from the old cocoanut.

1377. பசுக்கறுப்பென்று பாலுங்கறுப்பா?
Will the milk be black because the cow is so?

1378. பறையன்பொங்கலிட்டாற் பகவானுக்கேறாதோ?
Will not the sacrificial boiling of rice of a parian be acceptable to the Deity?

1379. பட்டணத்து வாசலைப் படலாலே மூடியிருக்கிறதோ?
Can the gate of the city be covered by a screen?

1380. பனங்காட்டுநரி ஓலைச் சலசலப்புக்கஞ்சுமா?
Will the fox of the palmira grove be frightened by the rustling of leaves.

1381. பதறாதகாரியஞ் சிதறாது.
The thing done carefully never fails.

1382. பசிவந்திடிற் பத்தும்பறந்துபோம்.
Ten things will flee before hunger.

1383. பல்லுவிழுந்த புடையன்.
A beaver snake without teeth.

1384. பசித்தசெட்டியார் பழங்கணக்குப்பார்த்தாராம்?
It is said that the hungry merchant examined his old accounts.

1385. பத்துவிதத்திலும் பறையனைநம்பலாம் பார்ப்பானை நம்பலாகாது.
A pariah may be relied on in ten ways, but not a brahmin.

1386. பனையேறியும் பாளைதோடாதிறங்கினாற்போல.
As one ascended a palmira tree, and descended without touching the blossom.

1387. பத்துப்பேரிலே பதினொராய்பேராயிருக்கவேண்டும்
You must become the eleventh, by associating with ten.

1388. பதினாறும்பெற்றுப் பெருவாழ்வும் வாழவேண்டும்.
Having begotten sixteen, prosper abundantly.

1389. பத்தியுண்டானால் முத்தியுண்டாம்.
If there be piety, heaven may be obtained.

1390. பத்துக்குமேலேயொரு பறையனுக்குத்தள்ளவேண்டும்.
After ten, give to a pariah.

1391. பச்சைநெல்லுக்குப் பறையனிடத்திற் சேவிக்கலாம்.
We may serve a pariah for unboiled paddy.

1392. பலசரக்குக்காரனைப் பைத்தியம்பிடித்தசம்பந்த
ம்.

As the petty dealer was affected with insanity.

1393. பசியாமலிருக்க மருந்துதருகிறேன் பழஞ்சோறு போடென்கிறான்.

He says give me some old rice, and I will give you medicine to obviate hunger.

1394. பலவீட்டுப்பிச்சை ஆறாய்ப்பெருகும்.

The alms obtained from many sources will accumulate like a river.

1395. படுக்கிறதுகுச்சு கனவுகாண்பது மச்சுமாளிகை.

To sleep in a hovel, dreaming of palaces.

1396. பாலுக்குங்காவல் பூனைக்குந்தோழன்.

He is the keeper of the milk, and the friend of the cat.

1397. பாத்திரமறிந்து பிச்சையிடு கோத்திரமறிந்து பெ
ண்கொடு.

Knowing the object, distribute your charities; knowing the family of the bridegroom, give your daughter.

1398. பாம்புகடிக்கத் தேளுக்குப்பார்க்கிறதோ?

When bitten by a snake, would you treat the case as if bitten by a scorpion.

1399. பாகற்கோட்டைபுதைக்கச் சுரைக்கோட்டை முளைக்குமா?
If a pagal seed be deposited in the earth, will a gourd spring up?

1400. பாலாரியனுக்குப் பசுராமநாதசுவாமிக்கு.
Milk for the brahmin, and the cow for the god Ramanathan.

1401. பாவியார்போனவிடமெல்லாம் பள்ளமுந்திட்டியும்.
The ground trodden by the unfortunate is uneven.

1402. பாடிப்பாடிக்குத்தினாலும் பதரிலரிசியில்லை.
Though pounded with musical accompaniments, rice will not be obtained from chaff.

1403. பாற்பசுவைக் கன்றிலேதெரியும் பாக்கியவான் பிள்ளையை முகத்திலேதெரியும்.
The milch cow is known by the calf; and the son of the rich man by the face.

1404. பாலும்பதக்கு மோரும்பதக்கோ?
Is a measure of butter milk equal to a measure of milk?

1405. பானையிலுண்டானால் அகப்பையில்வரும்.
If it be in the pan it may be taken out with the spoon.

1406. பாலருக்குப்பெலமழுகை மச்சத்துக்குப்பெலமு தகம்.

The power of the child is weeping, and the strength of the fish is water.

1407. பார்க்கக்கொடுத்த பணத்துக்கு வெள்ளிக்கிழமையா?

Do you say, it is friday, to avoid giving the money I gave you to look at?

1408. பாம்பைக்கண்டாற் படையுநடுங்கும்.

Even an army will tremble at the sight of a snake.

1409, பாதிச்சுரைக்காய்கறிக்குப் பாதிச்சுரைக்காய்வி தைக்கா?

Is one half of the gourd for curry and the other half for sowing?

1410. பாடென்றாற் பாணனும்பாடான்.

If requested, even the songster will not sing.

1411. பாலும்வெள்ளை மோரும்வெள்ளை.

Milk is white, and so is butter-milk.

1412. பால்தொட்டுப் பால்கறக்கவேணும்.

The teats must be repeatedly touched with the milk, as we draw it off.

1413. பாய்மரமில்லா மரக்கலம்போல.
Like a dhoney without a mast.

1414. பாம்பின்குட்டிபாம்பு அதின்குட்டிநட்டுவாக்காலி.
The generation of snakes, are snakes, and the young of these are scorpions.

1415. பாலுமாம் மருந்துமாம்.
It is not only milk but medicine.

1416. பாலைக்குடித்தவனுக்குப் பாலேப்பம்வரும் கள்ளைக்குடித்தவனுக்குக் கள்ளேப்பம்வரும்.
He who drinks milk will belch milk; and he who drinks toddy will belch toddy.

1417. பாவியைப்பிடித்துப் பாம்பாட்டுகிறது.
To play with the simple as a snake charmer does with snakes.

1418. பாராளலாமென்று பால்குடிக்கிறாய்.
You drink milk in order to govern the world.

1419. பாம்புதின்கிறவூரிலேபோனால் நடுமுறிநமக்கு.
When we go to the country where snakes are eaten, we shall have the middle piece.

1420. பாம்புக்குப்பால்வார்த்து வளர்த்தாலும் விடத்தைக்கொடுக்கும்.
Though a snake be fed with milk, its poison will not leave it.

1421. பாம்பும்நோவாமற் பாம்படித்தகோலும் நோவாமலிருக்கவேண்டும்.
The snake is not to be hurt, nor is the stick employed in beating it.

1422. பாழாய்ப்போகின்றது பசுவின் வயிற்றிலே.
It was spoiled in the cow's belly.

1423. பாராதவுடைமை பாழ்.
Articles not looked after perish.

1424. பாசமற்றவன் பரநேசி.
He who is devoid of passion is beloved of God.

1425. டாய்கிறமாட்டுக்கு முன்னே வேதஞ்சொன்னாற் போல.
Like repeating a sacred text to a furious cow.

1426. பிள்ளைக்குவிளையாட்டுச் சுண்டெலிக்குச் சீவன் போகிறது.
The sport of the child is death to the mouse.

1427. பிறவிக்குருடனுக்குத்தெய்வங் கண்கொடுத்தாற் போல.
As God gave sight to one who was born blind.

1428. பிறக்கிறபோதே முடமானாற் பேய்க்கிட்டுத்தீருமா!
Will offerings to devils heal one born a cripple?

1429. பிச்சையிட்டுக் கெட்டவனுண்டா?
Did ever any one become poor by giving alms?

1430. பிச்சைக்குமுத்தது கச்சவடம்.
The office of a pedlar is little better than begging.

1431. பிச்சைச்சோற்றிற்குப் பஞ்சமுண்டா?
Is there a scarcity in the rice given in charity.

1432. பித்தற்குத் தன்குணநூலினுஞ்செம்மை.
The imaginary qualities of a fool are better in his own sight than moral institutes.

1433. பிள்ளைபதினாறெழுதியிருந்தாலும் புருஷனில்லாமற் பிள்ளைப்பெறமாட்டாள்.
Though destined to bear sixteen children, she will not bear one without a husband.

1434. பிச்சன் வாழைத்தோட்டத்திலே புகுந்ததுபோல.
As a fool entering a plantation of bananas.

1435. பின்னாலேவரும் பலாக்காயினு முன்னாலேவருங் களாக்காய்நலம்.
Kalakay at hand, is better than jack-fruit not yet forth-coming.

1436. பிள்ளையையுங்கிள்ளிவிட்டுத் தொட்டிலையுமாட்டுகிறது.

To rock the cradle, whilst pinching the child.

1437. பிறந்தவன்றே இறக்கவேண்டும்.

We are mortal from birth.

1438. பின்னையென்பதும் பேசாதிருப்பதுமில்லையென்பதற்கடையாளம்.

To say-By and Bye, and to be silent, are signs of unwillingness.

1439. பிறர்மனைத்துரும்புகொள்ளாப் பிராமணனொருதண்டுகொண்டான்.

The brahmin who would not take a rush out of the thatch, has got a cudgel.

1440. பிடித்தகொப்பும்விட்டேன் மிதித்தகொப்பும்விட்டேன்.

I have let go the branch I seized, and the one I stood on.

1441. பிரமசாரி ஓடங்கவிழ்த்தான்.

The bachelor upset the boat.

1442. பெண்வீட்டுக்காரர் சம்மதித்தாற் பாதிவிவாகம் முடிந்ததுபோலாம்.

It is said that the consent of the parents of the young woman is equal to half the marriage.

1443. பிள்ளைப்பெற்றவரைப்பார்த்துப் பெருமூச்சுவிடுகிறது.
To sigh on beholding those who have born children.

1444. பித்தளை நாற்றமறியாது.
Brass is ignorant of its own offensive odour.

1445. பிள்ளைவரத்துக்குப்போனவிடத்திற் புருஷனைப்பறிகொடுத்தது.
Lost her husband when she went to obtain the gift of fecundity.

1446. பிச்சையெடுத்துஞ் சத்துருவின்குடிகெடு.
Beg from him, and thus destroy your enemy.

1447. பித்தற்குச்சிலபுத்திகள்சொன்னாற் பேசுதல்பிடிக்குமோ?
When advice is given to the idiotic, will it make any impression?

1448. பிள்ளையார்பிடிக்கக் குரங்காய்முடிந்தது.
The attempt to make Ganesa ended in the formation of a monkey.

1449. பிள்ளைவருத்தம் பெற்றவளுக்குத்தெரியும் மற்றவளுக்குத்தெரியுமா?
The sufferings of the child are known to the mother, not to others.

1450. பிள்ளையாரைப்பிடித்தசனியன் அரசமரத்தையு ம்பிடித்ததாம்.
It is said that Saturn who Seized Ganesa has also seized the sacred fig tree.

1451. பிச்சைக்குவந்தவன் பெண்ணுக்குமாப்பிள்ளையா?
Will he who came to ask alms become bridegroom if the girl is to be given in marriage?

1452. பிச்சைச்சோற்றிலுங் குழைந்தசோறாகாதா?
Is not overboiled rice better than that obtained by begging?

1453. பிணத்தைமூடி மணத்தைச்செய்.
Cover the corpse, and then apply aromatics.

1454. பிள்ளையில்லாவீட்டிற் கிழவன்றுள்ளிவிளையாடி யதுபோல.
As the old man played his gambols in the house where there was no child.

1455. பிறந்தவூருக்குச் சீலைவேண்டாம் பெண்டிருந்த ஊருக்குத் தாலிவேண்டாம்.
In his native place he needs no apparel; nor does a woman need her wedding thaly in her own country.

1456. பீத்தற்பட்டைக் கறுதற்கொடி.

A rotten string to an old basket.

1457. பீதின்கிறநாய்க்கு முத்துமாலையென்றபேராம்.

It is said that the dog that eats ordure is called a string of pearls.

1458. புற்றுக்குள்விலாங்கு முழிக்கிறதுபோல.

As the eel in a hole gazes.

1459. புலிபதுங்குகிறதெல்லாம் பாய்ச்சலுக்கிடம்.

The crouching of the tiger is the preparation for its leaping.

1460. புளுக்கைக்குப் புத்தி பிடரியிலே.

The wit of the base is in the back of his neck.

1461. புளுக்கையொழுக்கமறியாது பித்தளைநாற்றமறியாது.

The vulgar are ignorant of the rules of good breeding and brass of its own offensive smell.

1462. புலிக்குத்தன்காடென்ன வேற்றுக்காடென்ன?

What is the difference to the tiger, whether he is in his own forest or in another?

1463. புதுமைக்குவண்ணான் பறிகட்டிவெளுத்தான்.

The washerman, having first tied his basket on his hip, began to wash.

1464. புதியவரைநம்பிப் பழையவரைக்கைவிடாதே.

Desert not old friends for new ones.

1465. புலிபசித்தாற் புல்லுத்தின்னுமா?

Will a tiger eat grass when he is hungry?

1466. புண்ணுக்கோ மருந்துக்கோவிசம்?

To whom is the case urgent, to the patient or the physician?

1467. புத்திமேத்தினவர்க்குச் சித்தியாதோன்றில்லை.

There is nothing which may not be effected by the prudent.

1468. புத்தியற்றவர்கள் பத்தியாய்ச்செய்ததும் விபரீதமாம்.

What is done even with pious intention by the injudicious is wrong?

1469. புறக்குடத்திலே வார்த்ததண்ணீர்.

Water poured on the outside of the pitcher.

1470. புல்லுவிற்கிறகடையிலே பூவிற்கிறது.
To sell flowers in the market where grass is sold.

1471. புல்லும்பூமியுமுள்ளமட்டும்.
Enduring as long as the grass and the earth.

1472. புண்ணிலிட்ட கோல்போல.
Like putting a stick into a sore.

1473. புண்ணியக்கிணறுவெட்டப் பூதம்வந்துவெளிப்பட்டது.
On the well being dug for sacred purposes, a demon makes its appearance.

1474. புழுகிப்புழுகிமாவிடித்தாலும்புளுக்கைச்சிக்கொருகொழுக்கட்டை.
Though the slave girl pound the rice joyfully, she obtains only one cake.

1475. புத்திகெட்டராசாவுக்கு மதிகெட்டமந்திரி.
The foolish minister of an imprudent king.

1476. புண்ணியத்துக்குழுகிறமாட்டைப் பல்லைப்பிடித்துப்பார்த்தசம்பந்தம்.
Like looking at the teeth of a bullock that is ploughing for charity.

1477. புலிப்பால்குடித்தவன்போலிருக்கிறான்.
He is like one who has drank tiger's milk.

1478. புருஷனடிக்கக் கொழுந்தன்கோபித்ததுபோல.
As the brother of the husband who was beating his wife, became angry.

1479. புளியமரத்திலேறினவன்பற்கூசினாலிறங்குவான்.
He will descend from the tamarind tree when his teeth are set on edge.

1480. புலிக்குப்பிறந்து நகமில்லாமற்போகுமா?
Will that which is born of a tiger be without claws?

1481. புருவத்திற்பட்டாற்கரிக்குமோ கண்ணிற்பட்டாற் கரிக்குமோ?
Will it create pain by being put on the eyebrow, or in the eye?

2482. பூலோகமுதலியார்பட்டம் புகுந்துபார்த்தாற்பொட்டல்.
His name is that of chief, but on examination he is hollow.

1483. பூத்துச்சொரியப்பொறுப்பார்கள் முட்டிகட்டக்கலங்குவார்.
They can endure the falling of the flowers, but cannot endure the fatigue of tying up a pot.

1484. பூனைபால்குடிக்கிறதுபோல.
As the cat drinks milk.

1485. பூமியதிரநடவாத புண்ணியவான்.
A devotee under whose steps the earth quakes not.

1486. பூசணிக்காயெடுத்தவனைத் தோளிலேதெரியும்.
He who carried the pumpkin may be known by his shoulder.

1487. பூசப்பூசப் பொன்னிறம்.
Gold colored by repeated smearing.

1488. பெற்றமனம்பித்தும் பிள்ளைமனங்கல்லும்.
Parents are anxious about their offspring; the children are as obdurate as a stone.

1489. பெண்ணைவேண்டுமென்றால் இழியற்கண்ணைநக்கு.
If you want a wife, lick her ugly eye.

1490. பெட்டைக்கோழி கூவியோவிடிகிறது.
Will the day break at the crowing of the hen?

1491. பெட்டிபீத்தல் வாய்க்கட்டுத்திறம்.
The basket is rotten, but the rim is good.

1492. பெற்றதாய்செத்தாற் பெற்றப்பன்சிற்றப்பன்.
The father of a motherless child; is said to be only as an uncle.

1493. பெருநெருப்புக் கீரமில்லை.
There is no moisture in a great fire.

1494. பெருங்காயம்போட்ட பாண்டம்.
The vessel in which the asafœtida was put.

1495. பெருமாளென்கிறபேரை மாற்றப்போய்ப் பெரியபெருமாளானது.
One whose name was Paromaal went to have it changed, and became possessed of the name great Paromaal.

1496. பெற்றவளுக்குத்தெரியும் பிள்ளையருமை.
Mothers only know what precious gifts children are.

1497. பெண்ணரம்பைக் கூத்துப்போய்ப் பேய்க்கூத்தாயிற்றே
The dance of celestial nymphs has ended; and that of devils has commenced.

1498. பெற்றதெல்லாம்பிள்ளையோ வனைந்ததெல்லாங் குசக்கலமோ?
Are all that are brought forth, children; or, are all that are turned by the potter, vases?

1499. பெற்றதாய்பசித்திருக்கப்பிராம்மணபோசனஞ்செய்கிறது.
To feast a brahmin whilst his own mother is starving.

1500. பெருமையுள்ள கங்கையிலேவளர்ந்த பேய்ச்சுரை நல்லசுரையாகாது.
The wild gourd though it grow on the gunga will not become a good one.

1501. பெண்சாதியைத் தாய்வீட்டில்விட்டவனுக்கொரு சொட்டு.
A blow to him who left his wife in her mother's house.

1502. பெட்டியிற் பாம்புபோலானேன்.
I am become like a snake in a box.

1503. பேய் சிரித்தாலுமாகாது அழுதாலுமாகாது.
The laughing of a demon is not good, nor is its crying.

1504. பேச்சுக்கிராவணன் பின்பு தும்பகன்னன்.
In speech he is Ravenan, but he turns out to be Kumbakannan.

1505. பேர்முத்துமாலை, கட்டக் கறுத்தப்பாசிக்கு வழியில்லை.
Her name is pearl string, but she has no means of tying common beads.

1506. பேயடிக்கவும் பிள்ளைபிழைக்கவுமா?
Is it that the devil may beat, and the child live?

1507. பேசாதிருந்தாற் பிழையில்லை.
Taciturnity makes no blunders.

1508. பேசப்பேசவெந்தப்பாஷையும் வரும்.
Any language may be learnt by continual speaking.

1509. பேச்சுப்பல்லக்கிலே, தம்பி கால்நடைமேலே.
His speech is in a palanquin, whilst he himself is on foot.

1510. பேய்க்கூத்துமாமணக்கங்கோலும்.
The devil dances with a staff of the castor oil tree.

1511. பேச்சுக்கற்ற நாய்வேட்டைக்காகாது.
A dog that has learnt to talk is not fit for hunting.

1512. பேயாடிய கம்பம்போல.
Like a demon's gymnastic pole.

1513. பையமிதித்தது வேடனடி, பதறி மிதித்தது பன்றி யடி.
The huntsman steps softly, but the hog moves with affrighted steps.

1514. பையிற்கட்டிவைத்த பொருள் பறிகொடுக்கப்பட்டது.
The thing tied up in a bag is carried off.

1515. பையமென்றாற் பனையையும் மெல்லலாம்.
By eating slowly, even a palmira tree may be eaten.

1516. பொன் முடி, அல்லது சடை முடி.
A gold crown, or platted hair.

1517. பொறுத்தாரரசாள்வர் பொங்கினர் காடுறைவர்.
They who are slow to wrath will reign as king's while the precipitate will inherit the desert.

1518. பொன்னின் குடத்துக்குப் பொட்டிட வேண்டுமா?
Is it necessary to put a mark on a golden vessel?

1519. பொன்னம்பலமுண்டானாலென்னம்பலங் கிடையாது?
If a golden house be possessed, what kind of house may we not obtain?

1520. பொன்னின்கத்தியென்று வயிற்றிலே குத்துகிறதா?
Because the knife is made of gold, is it necessary to run it into one's belly?

1521. பொய்யிருந்து புலம்பும் மெய்யிருந்து விழிக்கும்.
Falsehood will weep; truth will be confident.

1522. பொற்கலத்துக்கோசையில்லை, வெண்கலத்துக் கெல்லோவோசை.
A golden plate has no sound, but a brass one has.

1523. பொய்சொன்னவாய்க்குப் பொரியுங்கிடையாது.
Even parched paddy cannot be obtained for a lying mouth.

1524. பொல்லாப்பிள்ளையிலில்லாப்பிள்ளை.
A bad child is worse than no child.

1525. பொறுதியென்பது கடலினும் பெரிது.
Forbearance is greater than the ocean.

1526. பொருள்போனவழியே துக்கம்போம்.
The grief follows in the track of the lost wealth.

1527. பொய்நின்று மெய்யை வெல்லுமா?
Can a lie conquer truth?

1528. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லு.
Though you tell lies do it constantly.

1529. பொய்யானபொருளாசை மெய்யானவருளாசை யை விலக்குகிறது.
The vain desire after riches is destructive of gracious inclinations.

1530. பொக்குவாய்ச்சி மெச்சாளாம் பொரிமாவை.
The toothless dame praised the flour of parched rice.

1531. பொற்காப்புக்காசைப்பட்டுப் புலியால் மரணம டைந்தது.
Was killed by a tiger in consequence of coveting a golden bracelet.

1532. பொன்னைவைக்கிற கோயிலிலே பூவையாவது வைக்க வேண்டும்.
Place at least a flower in the temple where gold is offered.

1533. போக்கணங்கெட்டவன் இராசாவினும் பெரியவ ன்.
He who is impudent is greater than a king.

1534. போனமாடு தேடுவாருமில்லை, மெய்த்தகூலி கொ டுப்பாருமில்லை.
They will not seek the strayed cow nor pay the keeper his hire.

1535. போனசுரத்தைப் புளியிட்டழைக்கிறது.
To call back the fever by administering acids.

1537. மவ்விட்டப்பவ்வாயிற்று.
What was written M. has become P.

1538. மந்திரியில்லா யோசனையும் ஆயுதமில்லாச் சே
னையும் விழும்.
Council without an adviser, and a host without arms will fall.

1539. மலையே விழுந்தாலுந் தலையே தாங்கவேண்டும்.
Though a mountain fall, the head must bear it.

1540. மயிருள்ள சீமாட்டி இடதுகையினாலும் வலதுகை
யினாலும் முடிப்பாள்.
A matron who has tresses will adjust them with both hands.

1541. மலைமேலிருப்போரைப் பன்றிபாய்வதுண்டா?
Will the wild hog fall on those seated on a mountain?

1542. மணிநாவசையாமல் இராசரிக்கத் செய்கிறன்.
Under his government the tongue of the bell does not move.

1543. மண்பிள்ளையானாலுந் தன்பிள்ளை.
Though made of clay he prefers his own child.

1544. மலையைத்துளைக்க வாச்சியுளிவந்தாற் போல.
Adzes and chisels were brought to pierce the mountain.

1545. மண்டையிலெழுதி மயிராலே மறைத்திருக்கிறது.
To cover with the hair what is written on the scull.

1546. மடியிற்கனமுண்டானால் வழியிற்பயமுண்டாம்.
When the waist girdle is weighty, there will be fear on the journey.

1547. மதியுமது விதியுமது.
Such is the purpose of thy mind, and such is thy fate.

1548. மழைமுகங் காணாத பயிருந் தாய்முகங்காணாதபி ள்ளையும் வாடும்.
Verdure that sees not the rain, and a child that sees not its mother's face, will languish.

1549. மழைக்கோபடலிடிக்கோபடல்?
Is the screen for rain, or for a thunderbolt?

1550. மகாராசன் கலியாணத்திலே நீராகாரம் நெய்பட் டபாடு.
At the royal wedding, water was as scarce as ghee.

1551. மலைவிழுங்குகிறதற்கு மண்ணாங்கட்டி பச்சடியா?
Is it necessary to obtain lumps of earth as sauce, in order to swallow mountains?

1552. மலையைமலைதாங்கும், மண்ணாங்கட்டியாதாங்கும்!
A mountain will support a mountain, but will a clod of earth support it?

1553. மலைபோலே பிராமணன் போனானும் பின்குடுமிக்கு வந்தது சாத்திரம்.
Ceremonies pertaining to the knot of hair at the death of a brahmin who was as big as a mountain.

1554. மலையேறினாலும் மச்சினனைக் கைவிடாதே.
Though you are elevated to the mountains forsake not your brother-in-law.

1555. மலடியைப் பிள்ளைபெறச் சொன்னால் பெறுவாளா?
If the barren be commanded to bear, will she obey?

1556. மலைபோல வந்ததெல்லாம் பனிபோற்போய்விடும்.
That which came as a mountain will disappear as dew.

1557. மட்டக்கரியையும் மடப்பளியாரையும் நம்பப்படாது.

A young elephant and the caste of madapallies cannot be trusted.

1558. மலடிக்குத்தெரியுமா பிள்ளைப்பெறும் வருத்தம்?

Do the barren know the pains of child-birth?

1559. மருத்துமாவுக்குச் சயிக்கினை, மடங்காக் குதிரைக்குச் சவுக்கடி.

A sign is enough for the swift steed, but the stubborn horse requires a whip.

1560. மலையிலே விளைந்தாலுமுரலிலேவந்து மசியவேண்டும்.

Though produced on the mountains, it must be pounded in a mortar.

1561. மந்திரத்தால் மாங்காய் விழுமா?

Will the mangoe fruit fall before incantations?

1562. மண்வெட்டி கூதலறியுமா?

Is the hoe sensible of cold?

1563. மந்திரமில்லான் பூசையந்திபடுமளவும்.

The devotions of one who is ignorant of the sacred verses last till sunset.

1564. மங்கை தீட்டானாற் கங்கையிலே முழுகுவாள் கங்கை தீட்டானாலெங்கே முழுகுவாள்?

If a maid be defiled she may bathe in ganga, but when ganga herself is defiled, where is she to perform ablutions?

1565. மலையிலக்கானாற் குருடனுமெய்வான்.

Even the blind may shoot if a mountain be the target,

1566. மறந்து செத்தான், பிராணன்வாவென்றால் வாராது.

He died through forgetfulness; but life will not return at his bidding.

1567. மச்சத்தின் குஞ்சுக்கிப்படியென்றால் மாதாவுக்கெப்படியோ!

If it happen thus to the young fish, what may not the old ones expect?

1568. மனதறியாப்பொய்யுண்டா?

Are there any lies not known to the mind of the utterer?

1569. மண்குதிரையைநம்பி யாற்றிலிறங்கலாமா?

Would it be safe to descend into a river on a clay horse?

1570. மண்ணைத்தின்றாலும் மறையத் தின்கவேண்டும்.
Though one eat earth, it must be concealed in eating.

1571. மயிரூடாடாதார் நட்புச் சிறிது பொருளூடாட்க்கெடும்.
Though the friendship of two be so close as not to admit a hair between, it will be destroyed by money transactions between the parties.

1572. மடைக்கிழவனிலும் புத்தியுள்ளவாலிபனதிகம்.
A prudent youth is better than an old fool.

1573. மரமேறிக் கைவிட்டவன் கெட்டான், கடன்வாங்கிக் கடன்கொடுத்தவன் கெட்டான்.
He who having climbed a tree let go his hold, perished; and so did he who lent borrowed money.

1574. மழைக்காலிருட்டிலும் மந்திகொம்பிழக்கப்பாயாது.
Even in the darkness of the rainy season, the monkey will not miss its hold of the branch in leaping.

1575. மகாமேருவைச் சேர்ந்த காகமும் பொன்னிறம்.
Even the crows of Maha-meru are gold coloured.

1576. மருந்து கால் மதி முக்கால்.
The medicine is one quarter, and prudence is three quarters.

1577. மக்கள் களவும் வரகு பதரும்.
The pilfering of children and the chaff of small grain.

1578. மரநாயிலே புழுகுவழிக்கலாமா?
Can musk be obtained from the wild cat?

1579. மழைவிட்டுந் தூவானமாறவில்லை.
Though the rain has ceased, the dropping is not over.

1580. மரத்தின் பழம் மரத்தினடியிலே விழும்.
The fruit of the tree will fall at its foot.

1581. மவுனம் மலையைச் சாதிக்கும்.
Silence stands against a mountain.

1582. மரத்தாலே விழுந்தவனை மாடு குத்துகிறதுபோல,
Like an ox goading a man who has just fallen from a tree.

1583. மணற் சோற்றிலே கல்லாராய்கிறதா?
Are stones to be sought in sand rice?

1584. மலைவெட்டி யெலிப்பிடிக்கிறதா?
Do you remove mountains in order to catch rats?

1585. மனக்கவலை பலக்குறைவு.
Mental solicitude destroys vigour.

1586. மது பிந்துகலகம்.
Confusion from honey drops.

1587. மயிர்ச்சுட்டுக் கரியாகுமா?
Can one make charcoal by burning hair?

1588. மதில் மேற் பூனை.
A cat on the wall.

1589. மடிமாங்காய்போட்டுப் பிடிக்கிறது.
To arrest as a thief one into whose bosom he has put a mangoe.

1590. மனிதர் காணும்பொழுதுமவுனம்; இராப்பொழுதி லுருத்திராட்சப் பூனை.
When seen he appears silent, but in the night he is a beaded cat.

1591. மனத்திலே பகை, உதட்டிலேயுறவு.
Hate at heart, and friendship at the lip.

1592. மரந்தன்னை வெட்டுகிறவனுக்கு நிழல்கொடுக்கும்.
The tree shades the man who fells it.

1593. மலையத்தனைசுவாமிக்குத் தினையத்தனை புட்பம்.
Flowers as small as rape seed to a deity as large as a mountain.

1594. மலைத்தேன் முடவனுக்கு வருமா?
Can the lame obtain mountain honey?

1595. மலையே மண்ணாங்கட்டியாகிறபோது மண்ணாங்கட்டியெப்படியாமோ?
When mountains are lumps of earth, what will be their dimensions?

1596. மலையைப்பார்த்து நாய்குலைத்தால் நாய்க்குச்சேதமோ மலைக்குச் சேதமோ?
When a dog barks at a mountain, who is injured—the dog or the mountain?

1597. மலையளவுசாமிக்கு மலையளவுபடைக்கிறார்களா?
Is the offering to be as large as a mountain, because the idol is so large?

1598. மாமியார்வீடு மகாசவுக்கியம்.
A mother-in-law's house is very comfortable.

1599. மாமியாருடைத்தால் மண்சட்டி மருமகளுடைத்தாற் பொன்சட்டி.

The pan is earthen when broken by the mother-in-law, but golden if broken by the daughter-in-law.

1600. மாட்டின் வாழ்க்கை மூட்டையிலே.

The advantage of the ox is in its burden.

1601. மாலைசுற்றிப் பிறந்தபிள்ளைமாமனுக்காகாது.

A child born involved in the after-birth is not advantageous to the uncle.

1602. மாடுழக்கிவர வீடுநக்கிவரும்.

If the ox be overworked, the household will suffer loss.

1603. மாத்திரை தப்ப மிதித்தாற் கோத்திரங் கூறப்படும்.

If one keeps not time in his steps, his family will be evil spoken of.

1604. மாமியார்செத்த ஆறுமாதம் மருமகள்கண்ணிற் றண்ணீர் வந்தது.

Tears appeared in the eyes of the daughter-in-law six months after the death of the mother-in-law.

1605. மாப்புளிக்கிறதெல்லாமப்பத்துக்கு நலம்.
The more the flour is leavened the better the bread.

1606. மானமழியிலுயிர்காவலா?
Is life to be preserved by the loss of honor?

1607. மாரிபதின்கலநீரிற் கோடைதனிலோர் குடிநீர்வன்மை.
One draught of water in drought is preferable to ten bushels in the rainy season.

1608. மாவிலுமொட்டாமல் மாங்காயிலுமொட்டாமல்.
It neither adheres to the flour nor to the mangoe.

1609. மாவிற்குத்தக்கபணியாரம்.
The confectionary is equal to the flour.

1610. மான்றலையை மனிதன்றலையாக்குவான், மனிதன் றலையை மான்றலையாக்குவான்.
He will transform a deer's head into a man's head; and vice versa.

1611. மிகுதியாசை அதிகநட்டம்.
Immoderate desire exposes to correspondent loss.

1612. மினைக்கெட்ட அம்பட்டன் பூனையைச் சிரைத்தா
னாம்.

It is said that the barber being without employment shaved the cat.

1613. மிடுக்கன் சரக்கு இருக்கவிலைப்படும்.

Whilst they retain their quality, strong drugs may be sold.

1614. மின்னாமல் முழங்காமல் இடிவிழுந்தது போல.

Like the falling of a thunderbolt when there is neither thunder nor lightning.

1615. மிதித்தாரைக்கடியாத பாம்பில்லை.

There is no snake that will not bite them who tread on it.

1616. மின்மினிப்பூச்சிவெளிச்சத்துக்கிருட்போமோ?

Will the darkness subside in the light of a firefly?

1617. மீன்குஞ்சுக்கு நீச்சுப்பழக்க வேண்டுமோ?

Is it necessary to teach young fishes to swim?

1618. மீண்டுங்கீரை புளியிட்டுங்கீரை.

Herbs again, and acid with them.

1619. முருக்குப்பருத்தென்ன தூணாகப்போகிறதோ?
When the Muruku thorn becomes thick, will it be used as a pillar?

1620. முன்னங்கை நீண்டால் முழங்கைநீளும்.
When the hand is stretched out, the elbow will follow it.

1621 முதற்கோட முற்றுங்கோடும்.
If crooked at first, it will always be so.

1622. முள்ளுக்கு முனைசீவிவிடுவார்களா?
Will they point a thorn?

1623. முகமாகாதிருந்தாற் கண்ணாடியென்னசெய்யும்?
What will the mirror effect if the face be ugly?

1624. முடவன் சந்தைக்குப்போனாற்போல.
As the cripple went to the bazaar.

1625. முடக்குதிரைக்குச் சறுக்கினதுசாட்டு.
Stumbling is the excuse of a lame horse.

1626. முளைத்தது மூன்றுமயிர் அதிலிரண்டுமயிர் புழுவெட்டி.
Only three hairs sprung up, of which two are eaten by worms.

1627. முழித்தவன்கன்று நாகுகன்று மூடினவன்கன்று கடாக்கன்று.

The calf of him who watched is a female, but that of him who slept is a male.

1628. மூட்டரோடாடிய நட்புக்கடுவழியிற் கட்டையூடாடியகால்.

Friendship with the vicious is like a foot wounded on the stump of a tree in a bad road.

1629. முன்னளந்தநாழி பின்னுமளக்கும்.

The measure which has been used may be used again.

1630. முதுகிலேபுண்ணுண்டானாற் காடுநுழையப்பயம்.

He who has a sore on his back will fear to thread the jungle.

1631. மூக்காலுங்காகம் முழுகிக்குளித்தாலும் வெள்ளைக்கொக்காகுமோ?

Though he wash three times a day, will the crow become a white crane?

---

632. முலைகொடுத்தவள்மூதேவி முத்தங்கொடுத்தவள்சீதேவி.

She who gave the breast is the goddess of poverty, but she who gave the kiss is the goddess of wealth.

1633. முலைக்குத்தையறியுமோ சவலைப்பிள்ளை?
Does the suckling know the pangs of the mother's breast?

1634. முன்னேவந்தசெவியைப் பின்னேவந்தகொம்பு மறைக்கிறது.
The ears that first appeared are covered by the new horns.

1635. முழுப்பூசணிக்காயைச் சோற்றிலேபுதைக்கிறது.
To bury the whole pumpkin under the rice.

1636. முன்னேரங்கப்பற்காரன் பின்னேரம்பிச்சைக்காரன்.
In the morning a ship owner, and in the evening a beggar.

1637. முயலையுமெழுப்பிவிட்டு நாயையுமுச்சுக்காட்டுகிறது.
To set dogs on a hare one has started.

1638. முதலேதுர்ப்பலமதிலேகர்ப்பிணி.
Already weak and also pregnant.

1639. முடவன் கோப்புத்தேனுக்காசைப்பட்டாற் கிடைக்குமா?
Will the lame man obtain the tree honey he longs for?

1640. முயற்சியுடையாரிகழ்ச்சி அடையார்.
The diligent will not be disgraced.

1641. முதலைதன்னிடத்து மலையொத்தயானையையும் இழுத்துச்செல்லும்.
The alligator in her own element will drag after her an elephant as large as a mountain.

1642. முள்ளிலே புடைவைபோட்டால் மெள்ள எடுக்க வேண்டும்.
When one's cloth is put on thorns, it must be taken off gently.

1643. முள்ளாலே முள்ளையெடுக்கவேண்டும்.
A thorn must be extracted by a thorn.

1644. முன்னேபோனாற் கடிக்கின்றது; பின்னேபோனாலுதைக்கின்றது.
Biting, if one precedes, and kicking if one follows.

1645. முதலுக்குமோசமாயிருக்கின்றது இலாபந்தாவென்கிறன்.
The principal being lost, he asks for profit.

1646. முதலெழுத்திலே வெள்ளெழுத்து.
The eye is dim at the first letter.

1647. முருங்கைக்காயென்றாற் பத்தியமுறியுமா?
Will the diet be affected by pronouncing the word *murrungakay*?

1648. முரட்டுப்பெண்ணுஞ் சுருட்டுப்பாயும்.
An obstinate woman and a mat that recoils on being spread.

1649. மூத்ததுமோழை இளையதுகாளை.
The senior is a fool, and the junior an ox.

1650. மூக்கைப்பிடித்தால் வாயாவென்னத்தெரியாது.
When his nose is seized, he is at a loss how to breathe.

1651. மூர்க்கனும்முதலையுங் கொண்டதுவிடா.
The idiot and the alligator will not relinquish their hold.

1652. மூக்குமயிர்பிடுங்கினல் ஆட்பாரங்குறையுமா?
Will the weight of the person be lessened by plucking the hairs of the nose?

1653. மூலிகையறிந்தால் மூன்றுலகுமாளலாம்.
A thorough herbalist may govern the three worlds.

1654. மூன்றேமுக்கால் நாழிகையிலே முத்துமழைபெய் தது; வாரியெடுக்கமுன்னே மண்மழைபெய்தது.

It rained pearls for three hours and three quarters, but before they were gathered it rained sand.

1655. மூடினமுத்து மூன்றுலோகம்பெறும் மூடாதமுத்துமு க்காற்காசும்பெறது.

A concealed pearl is equal in value to the three worlds, whilst an uncovered one is not worth a quarter of a cash.

1656. மெத்தப்படித்தவருக்குச் சோறுவெல்லம்.

Boiled rice is as scarce as sugar to the learned.

1657. மெல்லெனப்பாயுந் தண்ணீர் கல்லையு முருவிச் செல்லும்.

The water that flows gently will penetrate stones.

1658. மெய்சொல்லிவாழாதான் பொய்சொல்லிவாழ் வானோ?

Can he who prospers not by truth succeed by lies?

1659. மெத்தப்படித்தவன் சுத்தப்பயித்தியகாரன்.

The erudite is a great fool.

1660. மெழுகினவீட்டிலே நாய்மிதித்தாற்போல.
As a dog trod on the smeared floor.

1661. மெய்மூன்றம்பிறை பொய்பூரணசந்திரன்.
Truth is as the moon gibbous, falsehood like the full orb.

1662. மேய்கிற கழுதையைக் கூப்பிடுகிற கழுதைகெடுத்தது.
The ass that called the one at pasture injured him.

1663. மேய்த்தாற்கழுதைமேய்க்கிறேன்; இல்லாவிட்டாற் பரதேசம்போகிறேனென்கிறன்.
He says, I will either feed asses, or go on a pilgrimage.

1664. மோட்டைச்சிக்குத்தக்க மூக்கறையன்.
The noseless man is fit for the bald-headed woman.

1665. மோட்டைத்தலையிற் பேன்போல.
Like lice in a bald-head.

1666. மோருக்குப்போகிறவநக்கு முட்டிபிறகாலேயோ!
Is he who goes for buttermilk to conceal the pot behind him?

1667. மோந்துகொள்வதுபோற் கடிக்கிறது.
To bite as if kissing.

1668. யானைதன்தலையிலே மண்ணை வாரிக் கொட்டிக் கொள்ளுகிறதுபோல.
Like the elephant throwing sand on his own head.

1669. யானைக்கறுபதடி அருங்குள்ளனுக்கெழுபதடி.
To an elephant sixty steps, and seventy to the dwarf.

1670. யானைகறுத்தாலாயிரம் பொன்பெறும், பூனைகறுத்தாலென்னபெறும்!
If a black elephant will fetch a thousand gold coins, what will the black cat be worth?

1671. யானையை ஆயிரம்பொன்னுக்குவாங்கி இருப்பங்குசத்திற்கேமாந்து நிற்பானேன்?
Having given a thousand gold coins for an elephant, why hesitate to buy a goad?

1672. யானைமிதிக்கப் பிழைப்பார்களா?
Will they survive who have been trampled on by an elephant?

1673. யானைமுன்னே முயல்முக்கினதுபோல.
As the hare was stricken before the elephant.

1674. யானையைத்தேடக் குடத்துக்குட் கைவைத்தது போல.
As one put his hand into a pot to feel for an elephant.

1675. வடக்கத்தையானையும் வயிற்றுவலியையும் நம்ப ப்படாது.
Neither the colic nor a coast man is to be trusted.

1676. வயிற்றுப் பிள்ளையைநம்பி மாடுமேய்க்கிற பிள்ளையைப் பறிகொடுத்தாற்போல.
As one abandoned her child that tended the cows, trusting to the one in the womb.

1677. வடலிவெட்டியாள்; எருமைகட்டியாள்.
Preserve young palmiras by cutting, and buffaloes by tying.

1678. வணங்கினவிற் றீங்கைவிளைக்கும்.
The bent bow will do injury.

1679. வடையைத் தின்னச்சொன்னார்களா, துளையை யெண்ணச்சொன்னார்களா?
Did they tell you to eat the cakes, or to count the holes in them?

1680. வரவரமாமியார் கழுதைபோல.
An aunt who gradually becomes like an ass.

1681. வருந்தினால் வாராததொன்றில்லை.
There is nothing that may not be obtained by labour.

1682. வடுகுகொழுத்தால் வறையோட்டுக்குங்கூடாது.
If the Vadugo becomes fat, he is not worth a broken chatty.

1683. வளருங்காயைப் பிஞ்சிலேதெரியும்.
The future fruit may be known as soon as it sets.

1684. வண்ணானுக்கு வண்ணாத்திமேலாசை; வண்ணாத்திக்குக் கழுதைமேலாசை.
The washerman loves his wife, and she likes the ass.

1685. வளர்த்தநாய் முகத்தைப்பார்க்கிறதுபோல.
As the dog looks at the face of his owner.

1686. வவ்வாலனார்தின்றகனி வாயாலேவாயாலே.
The fruit that was eaten by the bat comes out of its mouth.

1687. வல்விலைக்கூறையும் மெல்விலைக்காளையும்.
High-priced cloth and a low-priced bullock.

1688. வண்டேறாத மலரில்லை.
There is no flower that insects will not visit.

1689. வலியவன்வெட்டினதே வாய்க்கால்.
The channel made by one in power is the one.

1690. வலிமைக்கு வழக்கில்லை.
There are no pleadings against the constituted authorities.

1691. வயசுக்கோநரைத்தது, மயிருக்கோநரைத்தது?
Is the hair grey by age or of itself?

1692. வண்ணான்பிள்ளைசெத்தால் அம்பட்டனுக்குமயிர் போயிற்று.
If the washerman's child die, it is only as the loss of a hair to the barber.

1693. வண்ணான்றுறையில் முயல்போல.
Like a hare in the vicinity of washermen.

1694. வல்லவன்பம்பரமணலிலுமாடும்.
The top of the skilful will spin even in sand.

1695. வயிற்றுக்குடலைக் கண்டாலும் வாழைநாரென்கி
றீர்கள்.
Though you see intestines you say it is only the fibre of a plantain tree.

1696. வழியிற்கண்டகுதிரைக்கு வைக்கோற்புரி கடிவா
ளமா?
Is twisted straw sufficient for a bridle for a stray horse?

1697. வண்ணான்கையில் மாற்று.
A change of garments in the hands of the washerman.

1698. வடலிவளர்த்துக் கள்ளுக்குடிக்கிறதா?
Is it to drink toddy after having reared the palmira tree?

1699. வல்லவனுக்குப் புல்லுமாயுதம்,
A blade of grass is a weapon to the powerful,

1700. வண்ணனுக்குவந்தான் வண்ணாத்திக்குப்போனன்
To the washerman he says he is come, and to the wife, he is gone.

1701. வண்ணனுக்கும் நிருவாணிக்குமலுவலென்ன?
What has the naked to do with the washerman?

1702. வயிறாரஅசனமுமரையாரப் புடைவையுமில்லை.
No food for the cravings of the belly, and no cloth for his waist.

1703. வந்தாரெல்லாஞ் சந்தையிற்குடியா?
Are all those who come to the market resident there?

1704. வழுவழுத்தவுறவில் வயிரம்பற்றியபகைநன்று.
The greatest enmity is preferable to uncertain friendship.

1705. வலியவந்தசீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளலாமா?
Having come of herself, is it proper to kick, and drive away the goddess of wealth?

1706. வளர்த்தகடாய் கையிலேபாய்ந்தது.
The pet goat butted the hand.

1707. வந்தசண்டையை விடுவதுமில்லை வலியச்சண்டைக்குப்போவதுமில்லை.
Neither leaving a quarrel that has taken place, nor of his own accord seeking a quarrel with others.

1708. வருவதுவந்ததென்றாற் படுவதுபடவேண்டும்.
It is necessary to endure what one has to suffer, if what was to come has transpired.

1709. வயிறுநிறைந்தாற் பானைமூடாதசாதி.
A clan that cover not their cooking utensils when the belly is full.

1710. வழியிற்கிடக்கிற கோடரியை எடுத்துக் காலின் மேற்போட்டுக்கொள்ளுவானேன்?
Why should you take the axe found lying in the road, and put it on your foot?

1711. வாய்நல்லதானாலூர் நல்லதுதான்.
If the mouth be right, the community will be good.

1712. வாய்தானிருக்கின்றது, வாய்க்கரிசிக்குவழியில்லை.
A mouth there is, but no means of obtaining rice for it.

1713. வாய்த்தவிடுக்போயடுப்பு நெருப்பும்போனது.

The bran for his mouth is gone, and so is the fire of his cook hearth.

1714. வாகையிலிளம்பிஞ்சு கண்டதுணடோ!

Has any one ever seen the unripe fruit of the Vagey tree?

1715. வாயாலேகேட்டால் வாழைக்காய்ப்பிஞ்சுங்கொடான்; தாய்புருஷன்வந்தால் தாற்றேடேகொண்டுபோவான்.

When requested to give a plantain he will not give even an unripe one, but when the mother's husband comes, he carries away the bunch.

1716. வாழைப்பழத்திலூசியேறுவதுபோல.

As a needle penetrates a plantain.

1717. வாதமூதியறி; வேதமோதியறி.

Understand alchymy by blowing, and the scriptures by study.

1718. வாயில்லாவிட்டால் நாய்கொண்டுபோய்விடும்.

Had he no mouth, the dog would carry him off.

1719. வாயிலேயுறவு மனதிலேபகை.
Friendship in the mouth, and enmity at heart.

1720. வாழ்ந்தவன் வறியவனானால் வறையோட்டுக்குங் கூடான்.
When the opulent become poor, they are not worth a potsherd.

1721. வாய்திறக்கப் பொய்பிறக்கும்.
As the mouth opens lies are produced.

1722. வாய்க்காலோமெத்தை வரப்போதலைக்குயரம்.
The watercourse a bed, and its embankment a pillow.

1723. வாயிலேவாழைப்பழங் கையிலேகறணைக்கிழங்கு
Plantains in the mouth, and in the hand karany roots.

1724. வாயிருந்தால் வங்காளம்போகலாம்.
Supposing we have a mouth we may go to Bengal.

1725. வாழும்பிள்ளையை மண்விளையாட்டிலேதெரியும்.
The fortunate child may be known when he plays in the sand.

1726. வாய்க்கொழுப்புச் சீலையாலேவடிகிறது.
The fatness of the mouth oozes through cloth.

1727. வானமேயீன்றது; பூமியேதாங்கினது.
The earth supported what the heavens yielded.

1728. வாய்புளித்ததோ மாங்காய்புளித்ததோ?
Is the mouth acid or the mangoes?

1729. வாதிகண்ணுக்கு மட்டம்மெட்டுமாற்று.
Inferior gold is estimated by the alchymist as superior.

1730. வானத்துக்குள்ளிருந்து மழைக்குப் பயப்படலாமா?
Being in the heavens shall we fear the rain?

1731. வாக்கினாற்கெட்டகழுதையைப் போக்கிலேவிடுங்கள்.
Let the ass pass on that was ruined by its words.

1732. வாய்மதத்தால் வழக்கிழந்தான்.
He lost his case through his ostentatious words.

1733. வானம்பார்க்கவிடைஞ்சலா?

Is there any objection to our gazing at the heavens?

1734. வாதுக்காடிய தேவடியாள் வயதுசென்றாற் கழுதைமேய்ப்பாள்.

When the enchanting harlot becomes old, she will feed asses.

1735. வித்தில்லாச்சம்பிரதாயம் மேலுமில்லைக்கீழுமில்லை.

Their is no effect without a cause either above or below.

1736. விரலுவ்வளவானால் உரலெவ்வளவாகாது?

If the finger becomes so thick, what will become of mortar?

1737. விளையும்பயிர் முளையிலேதெரியும்.

At its first shooting the plant may be known.

1738. விளங்காமடையன் விறகுக்குப்போனால் விறகுகிடைத்தாலுங் கொடிக்கிடையாது.

Though the idiot obtains fire wood, yet he will not obtain rope to bind it up.

1739. விடிந்தும்பெண்ணுக்கு மோட்டாக்கோ?
Is it necessary for a woman to cover herself with a veil after sun-rise?

1740. விளையாட்டுப்பிள்ளை விஷத்துக்கஞ்சாது.
Playful children fear not poison.

1741. விரல்வீங்கினால் விரலுக்குத்தக்கவீக்கம்.
When the finger swells, the swelling will be proportionate,

1742. விசுவாசப்பூனை கருவாட்டைத்தூக்கினதுபோல,
As the devout cat carried away the dried fish.

1743. விழுகிறசுவரிலே கைவைப்பானேன்?
Why put one's hand on a tottering wall?

1744. விடிந்தாற்றெரியும் மாப்பிள்ளைகுருடும்பெண்பிள்ளைகுருடும்,
It may be known at daybreak which is blind, the bridegroom or the bride?

1745. விசுவாசக்கொக்கு நடமாடிச்செத்ததாம்,
It is said that the devout crane died dancing.

1746. விளக்குக்கேட்டால் இருட்டுக்குச் சீட்டுவிடுவாருண்டோ?
When a lamp is sought, will the chit be sent to the darkness?

1747. விளக்கொளிக்காசைகொண்ட விட்டில்போல.
As an insect admiring the brightness of the flame.

1748. விழுந்தவனையெடாமலுதைக்கலாமா?
Is it right to kick him who has fallen, instead of helping him up?

1749. விழுந்தபிள்ளையெடுக்க நேரமில்லை.
There is no time even to lift up the fallen child.

1750. விளக்கைக்கையிலேபிடித்துக்கொண்டு கிணற்றில்விழுகிறது.
To fall into the well with a lamp in the hand.

1751. விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சமா?
A silken tassel to the broom.

1752. விடியுமட்டுமிராமகதைகேட்டு விடிந்தபின்சீதைக்கு ராமராரென்கிறது.
To inquire at sun-rise what the relationship is between Ramer and Sita after hearing the story of Rama the whole night.

1753. விருந்தில்லாவுணவு மருந்து.
Food taken alone is medicine.

1754. விருதுகூறிவந்து செடியினுழையலாமா?
Is it right to hide among the bushes after such professions of courage?

1755. விழலுக்கிறைத்த நீர்.
Water drawn in vain.

1756. விருதுக்கோ வேட்டையாடுகிறது?
Is it to go a hunting for the sake of a name?

1757. விருந்திட்டுப் பகைதேடுகிறது.
To seek enmity by making a feast.

1758. விஷத்தைக்குடிக்கப் பாலாமா?
Will poison become milk by being drunk?

1759. வித்தையிலெளியது சூனியம்; பன்னத்திலெளியது நீற்றுப்பெட்டி.
Witchcraft is the easiest of all arts, and the common ola basket is the easiest of all plats.

1760. விழுங்கினஇதரம் வயிற்றிலிராது.
Quicksilver swallowed will not remain in the belly.

1761. விதிபோகிறவழியே மதிபோகும்.

The mind will follow in the path of destiny.

1762. வியாதிக்குமருந்துண்டு விதிக்குமருந்துண்டா?

Medicine may be obtained for disease, but may it be had for destiny?

1763. வீடுஅசையாமற்றின்னும்; யானைஅசைந்துதின்னும்.

A house eats without moving; an elephant moves and eats.

1764. வீணாவுடைந்தசட்டி வெண்டுண்டு என்தலையிற் பூணாரம் பூண்டபுதுமைதனைக் கண்டதில்லை.

The white piece of a broken chatty is the ornament of my head. O vain man! such a wonder was never before seen.

1765. வீட்டுக்குவீரன் காட்டுக்குக்கள்ளன்.

He is courageous at home, and a coward in the jungle.

1766. வீடுகட்டமுன்னங் கிணறுவெட்டவேணும்.

The well must be dug before the house is built.

1767. வீரம்பேசிக்கோண்டெழுந்த சேவகன் வேட்டுங் களங்கணடு முதுகிடலாமா?
Can the veteran who rises to war with expressions of bravery retreat on beholding the field of conflict?

1768. வீட்டைக்கட்டிக் குரங்கைக்குடிவைத்த சம்பந்தம
Like placing a monkey in the house one has built.

1769. வெறுவாயக்கிலேகெட்டவன் விறகுக்குப்போனால் விறகுகிடைத்தாற் கோடிக்கிடையாது. கோடிக்கிடைத்தால் விறகுகிடையாது.
If he who has no beetle for his mouth go to seek fire wood and obtain it, he has no band to tie it with, and if he obtain a band he gets no wood.

1770. வெள்ளம்பள்ளத்தைநாடும் விதிபுத்தியைநாடும்
The flood flows into the hollows; and destiny infatuates the understanding.

1771. வெங்கலக்கடையிலே யானைபுகுந்ததுபோல.
As an elephant entered a brazier's shop.

1772. வெள்ளாடுநனைகிறதென்று வேங்கைப்புலி விழுந்துவிழுந்தழுகிறதாம.
The tiger falls and weeps because the sheep is getting wet.

1773. வெள்ளிவட்டிலும்வேணும் விளிம்பிலேபொன்னும்வேணும்.

A silver cup is wanted, and it must have a golden rim.

1774. வெட்கத்தாலொல்காதவள் குலஸ்திரீக்குப்போதாது.

She who suffers not from shame is not a modest woman.

1775. வெறுவாயைத் தின்றவனுக்கு வெள்ளையவல் கிடைத்ததுபோல.

As white parched rice obtained by one who had nothing to eat.

1776. வெட்கத்தாலொல்குகிறவேசி வேசிக்குப்போதாது.

The harlot who is capable of shame is not fit for one.

1777. வெட்டைவெளியிலே வையாளிவிடுகிறதா?

Is it necessary to make a road on an open plain?

1778. வெள்ளிபோட்டகாலுக்கு வெறுங்காலடிமையா?

Is the bare footed, slave to the foot adorned with silver ornaments?

1779. வெச்சனவுக்கன்றி வெண்ணெய்யுருகாது.
Butter does not melt without heat.

1780. வெளுத்துவிட்டாலுஞ்சரி சும்மாவிட்டாலுஞ்சரி.
It is the same thing whether they be washed or not.

1781. வெள்ளம் வருகிறதற்குமுன்னே அணைபோடவேண்டும்.
The dam must be made before the flood comes.

1782. வெறுங்கை முழமிடுமோ?
Can the hand alone measure a cubit?

1783. வெண்ணெய்யிருக்க நெய்தேடுகிறது.
To seek ghee whilst there is butter.

1784. வெண்ணெய்திரண்டுவரத் தாழியுடைந்தது.
The churn broke just as the butter was formed.

1785. வெந்நீரிலே வீடுவெந்துபோகாது.
The house will not be consumed by hot water.

1786. வெந்ததுபோதும் முன்றானையிலேபோடு.
It is boiled enough; put it in my cloth.

1787. வெள்ளாட்டிபெற்றபிள்ளை விடியற்காலஞ்செத்துப்போயிற்று.
The servant's child died early in the morning.

1788. வெல்லஞ்சாப்பிடுகிறவனொருவன் விரல்சூப்புகிறவனொருவன்.
One eating sugar, and another sucking his finger.

1789. வெற்றிலைக்குத்தண்ணீரும் வேசைக்குமஞ்சளும் போல.
As water to the beetle leaf, and tumerick to the harlot.

1790. வெறும்புளிதின்றாற் பற்கூசும்.
Mere acid will set the teeth on edge.

1791. வெந்தபுண் வினைசெய்யாது.
A burnt sore will do no injury.

1792. வெயிலிலேபோட்டாலுங் காயான் தண்ணீரிலே போட்டாலுநனையான்.
Though put in the sun he will not be parched, nor wet if put into the water.

1793. வேளைக்கரைக்காசாயிரம் பொன்பெறும்.
In peculiar circumstances half a cash may be equal to thousands of gold.

1794. வேண்டாப்பெண்டில் கால்படக்குற்றங்கைபடக் குற்றம்.
The touch both of the hands and feet of a woman not loved is regarded as a fault.

1795. வேலைக்கள்ளிக்குப் பிள்ளைப்பராக்கு.
The indolent woman pleads her care of her child in excuse for not working.

1796 வேப்பெண்ணெயுமாபத்துக்குதவும்.
Even margosa oil is of use in extremities.

1797. வேம்புங்கரும்பாச்சேவெற்றிலைப்பூநஞ்சாச்சே.
The margosa is become sugar-cane, and the beetle flower poison.

1798. வேலிபயிரழித்தால் விளைவதெப்படி?
If the fence destroy the herbs, whence the crop?

1799. வேலிக்குப்போட்டமுள்ளுக் காலுக்குத்தைத்தது.
The thorns that were placed as a fence have run into the foot.

1800. வேகிறவீட்டிலே பிடுங்குகிறதிலாபம்.
It is an advantage to abstract goods from a burning house.

1801. வேலையதிகஞ் சம்பளங்கொஞ்சம்.
Plenty of work, but little pay.

1746. விளக்குக்கேட்டால் இருட்டுக்குச் சீட்டுவிடுவாருண்டோ?
When a lamp is sought, will the chit be sent to the darkness?

1747. விளக்கொளிக்காசைகொண்ட விட்டில்போல.
As an insect admiring the brightness of the flame.

1748. விழுந்தவனையெடாமலுதைக்கலாமா?
Is it right to kick him who has fallen, instead of helping him up?

1749. விழுந்தபிள்ளையெடுக்க நேரமில்லை.
There is no time even to lift up the fallen child.

1750. விளக்கைக்கையிலேபிடித்துக்கொண்டு கிணற்றில்விழுகிறது.
To fall into the well with a lamp in the hand.

1751. விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சமா?
A silken tassel to the broom.

1752. விடியுமட்டுமிராம [illegible] டு விடிந்தபின்சீதைக்கு ராமனாரென் [illegible]
To inquire at su [illegible] relationship is between Ram [illegible] hearing the story of Rama [illegible]

1753. விருந்தில்லாவுணவு மருந்து.
Food taken alone is medicine.

1754. விருதுகூறிவந்து செடியினுழையலாமா?
Is it right to hide among the bushes after such professions of courage?

1755. விழலுக்கிறைத்த நீர்.
Water drawn in vain.

1756. விருதுக்கோ வேட்டையாடுகிறது?
Is it to go a hunting for the sake of a name?

1757. விருந்திட்டுப் பகைதேடுகிறது.
To seek enmity by making a feast.

1758. விஷத்தைக்குடிக்கப் பாலாமா?
Will poison become milk by being drunk?

17[illegible] [illegible]த்தையிலெளியது சூனியம்; பன்னத்திலெளிய [illegible]நீற்றுப்பெட்டி.
[illegible]craft is the easiest of all arts, and the [illegible]mon ola basket is the easiest of all plats.

[illegible]தின்றுதரம் வயிற்றிலிராது.
[illegible]lver swallowed will not remain in the

1815. அடுப்புக்கட்டிக் கழகுவேண்டுமா?
Is the hearth to be adorned?

1816. அன்றாக்கியசோறு ஆறுமாதத்திற்குவருமா?
Will the rice cooked on one day be available for six months?

1817. அரைவித்தைகொண்டம்பலமேறினால் அரைவித்தைமுழுவித்தையாம்.
When the pedant is privileged to attend the assembly of the learned, he is a finished scholar.

1818. அருமைமருமகன்றலைபோனாலும் போகட்டும்; ஆதிகாலத்துரல்போகலாகாது.
The head of my beloved son-in-law may go, but not the old paddy mortar.

1819. அடிக்குங்காற்றிலே எடுத்துத்தூற்றுகிறான்.
He winnows as the wind blows.

1820. அள்ளிக்கொடுத்தாற்சும்மா அளந்துகொடுத்தாற்கடன்.
If given without measuring it is a gift; if measured it is on credit.

1821. அக்காளிருக்கிறவரையிலே மச்சானுறவு.
So long as the elder sister lives, the relationship of brother-in-law subsists.

1822. அபசாரியென்றுயானைமேல்வரலாந் திருடியென்றுதெருவில்வரலாகாது.

A harlot may go forth on an elephant, but a thievish woman may not be seen in the street.

1823. அங்குமிருப்பானிங்குமிருப்பானுக்கினை சோற்றுக்கு ப் பங்குமிருப்பான்.

He will be there and here, and at the mess of rice too.

1824. அத்தைக்கு மீசைமுளைத்தாற் சித்தப்பாவென்றழைக்கலாம்.

Should my aunt get mustaches she may be called uncle.

1825. அக்காள்பகையும் மச்சானுறவுமா?

Is it the enmity of my elder sister and the friendship of my brother-in-law?

1826. அடுப்பெரிந்தாற் பொரிப்பொரியும்.

If the fire burn the paddy may be parched.

1827. அம்மையாளரைக்காசு தலைசிரைக்கிறது முக்காற் காசு.

Three quarters of a cash for shaving the head of a matron worth half a cash.

1828. அளக்கிறநாழி அகவிலையறியுமா?
Does the measure know the price of the corn?

1829. அம்மிமிடுக்கோ அரைப்பவள்மிடுக்கோ?
Is the strength in the grinding stone or in the grinder?

1830. அடங்காப் பெண்சாதியினாலே அத்தைக்கும்நமக்கும்பொல்லாப்பு.
Through my disobedient wife I and my aunt are at enmity.

1831. அழுகிறபிள்ளைக்கு வாழைப்பழங்காட்டியதுபோல.
Like showing a plantain to a crying child.

1832. அத்திப்பூவை ஆரறிவார்கள்?
Who knows the flower of the ficus racemosa?

1833. அச்சில்லாத் தேரோடாது.
Without axle the chariot will not move.

1834. அஞ்சினவனைப் பேயடிக்கும்.
Demons will assault the timorous.

1835. அணில்கொம்பிலே ஆமைகிணற்றிலே.
The squirrel is on the bough, and the tortoise in the well.

1836. ஆயிரநட்சத்திரங் கூடினாலும் ஒருசந்திரனாகிறதில்லை.
A host of stars are not equal to one moon.

1837. ஆண்டிவேஷங்கொண்டுமலைச்சல்விடவில்லை.
Though he has assumed the garb of a mendicant, he is not freed from mental solicitude.

1838. ஆவேறுநிறமானாலும் பால்வேறுநிறமாமோ?
Though cows are of different colors, will milk be so?

1839. ஆயிரம்பாம்பினுள் ஒருதேரை அகப்பட்டாற்போல.
As a frog was entangled among a thousand snakes.

1840. ஆற்றைக்கடந்தல்லோ அக்கரையேறவேண்டும்.
We reach the opposite shore by first crossing the river. Do we not?

1841. ஆற்றிற்போட்டாலும் அளந்துபோடவேண்டும்.
'Though you cast it into the river, first measure it.

1842. ஆந்தை சிறிதாயிருந்தாலுஞ் சத்தம்பெரிதாயிருக்கின்றது.

Though the owl is small its cry is loud.

1843. ஆமைதிடலிலேறினாற்போல.

As the tortoise ascended the mound.

1844. ஆற்றைக்கடத்திவிட்டால் ஆகாசமேறக்குளிகைதருவேன்.

Ferry me over the river, and I will give you a medicament by which you may ascend the heavens.

1845. ஆற்றுக்குப்போனதுமில்லைச் செருப்புக்கழற்றினதுமில்லை.

He has not been to the river nor has he taken off his shoes.

1846. ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு.

Death happens to him of six, and to him of a hundred years.

1847. ஆடுகொடுக்காதவிடையன் ஆவைக்கொடுப்பானா?

Will the herdsman give a cow who refused a sheep?

1848. ஆமணக்குமுத்து ஆணிமுத்தாகுமா!

Will the castor seed be a precious pearl?

1849. ஆமணக்கைவிதைத்தால் ஆச்சாமுளைக்குமா?
If you sow a castor-oil seed, will an ebony tree be produced?

1850. இழவுக்குவந்தவள் தாலி அறுப்பாளா?
Will she who came to the funeral cast away her marriage thaly?

1851. இலங்கையைச்சுட்ட குரங்கு.
The monkey that burnt Lanka.

1852. இருவராலேஆகாதகாரியம் ஒருவராலேயாகுமா?
Can that be effected by one which two could not accomplish?

1853. இரப்பானுக்கு வெறுஞ்சோறுபஞ்சமா?
Is it difficult for the beggar to procure simple rice?

1854. இரண்டுவீட்டிலுங் கலியாணம் இடையிலேசெத்தது நாய்க்குட்டி.
A whelp dies between two houses, in both of which there is a marriage festival.

1855. இராசன்மகளானாலுந் தன்நாயகனுக்குப்பெண்டு.
Though a king's daughter she is the wife of her husband.

1856. இராசநீதியுண்டானால் தெய்வநீதியுண்டாம்.
When there is royal justice, there will be divine justice.

1857. இரவற்சீலையைநம்பித் தன்கந் தையை அடுப்பிற் போட்டதுபோல.
As one put his tattered cloth in the fire, depending on a borrowed one.

1858, இன்றைக்குச்செத்தால் நாளைக்கிரண்டுநாள்.
If one die to-day, to-morrow will be the second day.

1859. உதைப்பானுக்குவெளுப்பான் சாதிவண்ணான்.
A good washerman will wash for one who kicks him.

1860. உழுதவன்கணக்குப்பார்த்தால் உழக்குமிஞ்சாது.
When the farmer takes stock he finds no surplus.

1861. உருப்படத் திருப்படும்.
Rehearsal secures divine concurrence.

1862. உண்மைசொல்லிக் கெட்டவர்களில்லை.
No one was ever ruined by speaking the truth.

1863. உருவியவாளுறையிலிடாத வீரன்.
A veteran who never sheaths his sword.

1864. உலகத்துக்கு ஞானம்பேய் ஞானத்துக்குலகம்பேய்.
The world is a demon to religious abstraction, and so religious abstraction is a demon to the world.

1865. உப்பைக்கடித்துக்கொண்டுரலை விழுங்கினாற்போ
ல.
As one swallowed the paddy mortar with salt.

1866. உள்ளங்கைக்குள்ளே வைகுண்டங்காட்டுவான்.
He will exhibit Vaicundam in the palm of the hand.

1867. ஊராரைப் பகைத்து உயிரோடிருந்தவரில்லை.
He who hates the whole community cannot subsist.

1868. ஊசிக்கூசியெதிருசிபாயுமா?
Will one needle penetrate another needle entering at the point?

1869. ஊருக்காகாதபிள்ளை தாய்க்காகாது.
The child that is unfit for his mother is unsuited for the country.

1870. ஊர்வாய்மூட உலைமூடியுண்டா?

Is there a lid to cover the approach to the country?

1871. ஊசிமுனையிலிருந்து தவஞ்செய்தாலும் உபதேசிக்குமோட்சமில்லை.

Though he perform penance on the point of a needle, the religious teacher will not obtain heaven.

1872. நெடுந்தச்சும் குறுங்கொல்லும்.

Length to the carpenter and shortness to the smith.

1873. பலஉமிதின்றால் ஒருஅரிசிதட்டும்.

If many husks be eaten perchance a grain may turn up.

முற்றிற்று.